பக்கங்கள்:-பன்னிரண்டு
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

# வலம்புரி
The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி 26 | வியாழக்கிழமை | (10.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 203

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# இடைக்கால சபையில் முஸ்லிம்கள் தனித்தரப்பு!

## முஸ்லிம் எம்.பிக்கள் வலியுறுத்து

(நமது நிருபர்)

**அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பேச்சு வார்த்தையில் முஸ்ஸிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ள வேண்டும்.**

**இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண முஸ்ஸிம் பாராளுமன்ற ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நண்பகல் 12.00 மணி தொடக்கம் 1.30 மணிவரை வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற ஒன்றியத்தின் விசேட கூட்டம் நடைபெற்றது.

வன்னிப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் நூர்தீன் மசூர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பேச்சுவார்த்தையில், முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து, அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் விளக்குவது எனவும் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைப்பதில் முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை.

ஆனால்,அவ்விடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம்கள் மற்றும் ஏனைய சமூகத்தவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும் எனவும் முஸ்லிம் பாராளுமன்ற ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஸ்ரப் உட்பட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்.

கூட்டம் இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (இ)

## கூட்டணியைக் கண்டிக்கிறது அ. இ. தமிழ்க் காங்கிரஸ்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியகுழுக் கூட்ட அறிக்கையை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கண்டித்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் கூடிய அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் அரசியல் குழு உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கலாநிதி குமரகுருபரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இக்கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பொறுப்பாக செயற்பட வேண்டும் என்றும் தவறான அபிப்பிராயங்களை மக்கள் மத்தியில் பரப்புவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் தமிழீழ விடுதலைப்புலிகளை தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சட்ட ரீதியாக ஏற்றுக் கொண்ட நிலைப்பாட்டில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி மாறி வருவதாகவும் அக்கண்டனக் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.(இ)

## அமைச்சர் ஜோன்சன் இன்று யாழ்.வருவார்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்ணான்டோ இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தேசிய விளையாட்டு விழாவை நடத்துவதா? இல்லையா?என்பது குறித்து இன்று யாழ். செயலகத்தில் இடம் பெறும் மாநாட்டில் ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

## 13 ஈழத் தமிழ் அகதிகள் நெடுந்தீவுக்கு வந்தனர்

(நெடுந்தீவு)

இந்திய மீனவர்களின் படகு மூலம் 9 குடும்பத்தைச் சேர்ந்த 13 ஈழத் தமிழ் அகதிகள் நேற்று அதிகாலை 5 மணியளவில் நெடுந்தீவு மேற்கு கோட்டைக்காடு கடற்கரையில் தரையிறங்கினர்.

தரையிறங்கிய இவர்கள் அனைவரும் நெடுந்தீவு பிரதேச செயலரினால் பொறுப்பேற்கப்பட்டு நேற்று மதியம் 1.30 மணியளவில் யாழ்ப்பாணத்திறகு அனுப்பி வைக்கப்பட்டு

(10ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால சபை வரைபு அடுத்த வாரம் புலிகளுக்கு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பான அரசாங்கத்தின் உத்தேசத் திட்ட வரைபு,இவ்வார இறுதிக்குள் தயாரிக்கப்பட்டு விடுமென்று,அரசதரப்பலிருந்து நம்பகமான தகவல் வெளியாகியுள்ளது.

இவ் உத்தேசத் திட்டவரைபு குறித்து,பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முக்கிய அமைச்சர்களுடன் நேற்று முன்தினம் மாலை அலரி மாளிகையில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இச் சந்திப்பில் அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்,பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இடைக்கால நிர்வாக சபை தொடர்பான அரசின் உத்தேசத் திட்ட வரைபு, அடுத்த வார முற்பகுதியில் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## முட்கம்பிகளை அகற்றக் கோரி வேலணையில் ஆர்ப்பாட்டம்

(திருநெல்வேலி)

வேலணையில் உள்ள இராணுவ முட்கம்பி வேலிகளை உடனடியாக அகற்றுமாறு கோரி, வேலணை மக்கள், வேலணை பொது அமைப்புகளுடன் இணைந்து வேலணைச் சந்தியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று நடத்தினர்.

இராணுவக் காவலரணில் போடப்பட்டிருந்த பாதுகாப்பு முட்கம்பி வேலியில் மாணவன் ஒருவன் தவறுதலாக தொட்ட போது மின்சாரம் தாக்கியதையடுத்தே இவ்வார்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அப்பகுதிக்குச் சென்று ஆர்ப்பாட்டகாரருடன் பேச்சு நடத்தினர்.

இதன் போது நாளை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் சாதகமான பதிலைத் தரத்தவறும் பட்சத்தில் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (ந-43)

## ஸ்பெயின் அனுசரணையுடன் சுவீடனில் அரசு - புலிகள் பங்கேற்கும் கூட்டம்

(யாழப்பாணம்)

சுவீடன் தலைநகரான ஸ்ரொக்ஹோமில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்களும் இலங்கை அரசாங்கப பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் கூட்டமொன்றிற்கு ஸ்பெயின் அனுசரணை வழங்கவுள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிக்கு எமது நாடு தொடர்ந்தும் ஆதரவு வழங்கும். செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கு முன்னர் இரு தரப்பினருக்குமிடையிலான கருத்து முரண்பாடுகள் களையப்படுமென தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் ஸ்பெயின் நாட்டின் சிரேஷ்ட ராஜதந்திரியான ஹான்ஸ் நிக்கல்சல் கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும்,அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்பில் தொடர்ந்தும் பங்கு பற்ற வேணடுமென விடுதலைப் புலிகளைச சர்வதேச சமூகம் வலியுறுத்தி வருகிறது.அந்த வகையில், இலங்கையில் சேவையாற்றுவதற்காக தற்போது சேவையிலிருக்கும சுவீடன் நாட்டு கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை 50 வீதத்தால் இன்னும் அதிகரிக்கப்படவுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## தந்தை கத்தியால் வெட்டி மகன் துடிதுடித்துப் பலி!

### ஆனைக்கோட்டையில் பயங்கரம்

(கொழும்புத்துறை)

பெற்ற மகனை கத்தியால் வெட்டிக் கொலை செய்தார் தந்தை.

இப் பயங்கரமான கொலைச் சம்பவம் நேற்று நண்பகல் 1.30மணியளவில் ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நடைபெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவன் சி.தயாளன்(வயது15) என்ற சிறுவனே கொலை செய்யப்பட்டவராவர்.

மது போதையில் வீட்டில் அட்டகாசம் புரிந்த சிறுவனின் தந்தையான ப.சிறிதரன்(வயது 33)பிரஸ்தாப சிறுவனை அடித்துத் துன்புறுத்தியதுடன்,அவனை கத்தியால் பிடரியில் வெட்டினார்.

இதனால் பிரஸ்தாப சிறுவன் அவ்விடத்திலேயே துடிதுடித்து பரிதாபகரமாக மரணமானான்.

சிறுவனின சடலம் பொலிஸாரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,கடந்த 6-ந் திகதி மீசாலையில் தந்தையொருவர் மகனைக கத்தியால் குத்தி கொலை செய்தமையும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (இ-51)

## அன்ரன் பாலசிங்கம் - தமிழ்ச்செல்வன் சந்திப்பு லண்டனல்லாத ஐரோப்பிய நாடொன்றில்?

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை வெளிநாடொன்றில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேசவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லண்டனில் தற்போது தங்கியிருக்கும் அன்ரன் பாலசிங்கத்துடன், வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பான நகல் கையளிக்கப்பட்டதும் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு பற்றி கலந்தாலோசிக்கவே சு.ப.தமிழ்ச்செல்வன் வெளிநாடு செல்லவிருப்பதாக தெரியவருகிறது.

இலண்டனில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத் தடை விதித்துள்ள போது அதன் அங்கத்தவரான சு.ப.தமிழ்ச்செல்வன் அங்கு செல்வதற்குரிய விசாவை வழங்குவதற்கு கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் மறுப்புத் தெரிவிக்கலாம் என்ற அடிப்படையிலேயே இலண்டன் அல்லாத ஐரோப்பிய நாடு ஒன்றில் அவ் இருவரும் சந்தித்துப் பேசுவதற்கு,சமாதானத்திற்கு அனுசரணையாகச் செயற்படும் நோர்வே

(10ம் பக்கம் பார்க்க)

## இன்று ஒரு தகவல்

# எரிபொருள் தரும் தாவரங்கள்

எதையும் எரிப்பதற்கு நாம் தயாராகத்தான் இருக்கின்றோம். ஆனால் எரிபொருள் தான் சரியாகக் கிடைப்பதில்லை. பெற்றோல், மண்ணெண்ணெய் இதற்கெல்லாம் என்ன பாடு படல் வேண்டியிருக்கின்றது. அங்கே, இங்கே பூமியைத்தோண்டிப்பார்த்து கிடைத்த வரைக்கும் எடுத்துக் கொண்டிருக்கின்றோம்! அதற்குச் செலவு அதிகமாகவுள்ளது. இன்னும் நூறு வருடத்திலே பூமியில் இருக்கும் எண்ணெய்யே இல்லாமல் போய் விடும் எனும் பயம். அதனாலே இதற்குப் பதிலாக வேறு என்ன செய்யலாம் என்று ஆராய்ச்சி தாராளமாக நடந்து கொண்டிருக்கின்றது.

அமெரிக்காவில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலே Melvin Kalvin என்ற பேராசிரியர் சுலபமாகக் கிடைக்கக் கூடிய ஏராளமான தாவரங்களில் இருந்து எரி எண்ணெய்களை எடுக்கலாம் என்று கண்டுபிடித்திருக்கின்றார். பிறேசில் அமேசன் பகுதியில் ஓர் அதிசய மரம் இருக்கின்றதாம். அந்த மரத்திற்கு பெயர் கோபைஃ பெரா மல்டிஜுகா இறப்பர் மரத்திலிருந்து இறப்பர் பாலை எடுக்கின்றோம் அல்லவா? அதே மாதிரி இந்த மரத்திலிருந்து எண்ணெய் எடுக்கலாமாம்! அதனாலே இந்த வகை மரங்களை அதிக அளவில் வளர்ப்பதற்கு முயற்சி செய்கிறார்களாம்.

நன்றாக வளர்ந்த ஒரு பெரிய மரத்திலே ஒரு ஓட்டை போட்டு விட்டால் எண்ணெய் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். ஒரு நாளிலே 25 லீற்றர் வரைக்கும் எண்ணெய் கிடைக்குமாம். அதன் பின் ஒரு தக்கையாலே அந்த ஓட்டையை மூடி விட வேண்டியது தான். ஆறு மாதத்திற்குப் பிறகு மறுபடியும் எண்ணெய் கிடைக்குமாம்! இந்த எண்ணெயின் பெயர் கோபைபா (Copaiba) எண்ணெய். அதை அப்படியே டீசல் இயந்திரத்தினுள் விட்டு வாகனம் செலுத்தலாமாம். இதைக் காய்ச்சி வடித்தால் பல விதமாக உபயோகப்படுத்தலாம்.

பிலிப்பைன்ஸில் ''பிட்டோஸ் போரம் ரெசினிஃபெரம்'' எனும் மரம் இருக்கின்றதாம். அதிலிருந்தும் எண்ணெய் கிடைக்கின்றதாம். அதன் பழத்தில் கூட சிறிதளவு எண்ணெய் இருக்கிறது. அதை நீராவியிலே விட்டு காய்ச்சி வடித்து எடுக்கலாம். அதிலே ஐதரசனைச் செலுத்தி பக்குவப்படுத்தல் வேண்டும். அதன் பின் அதைப் பெற்றோலுக்குப் பதிலாக உபயோகிக்கலாம்! இதே மாதிரி வேறு சில தாவரங்களிலிருந்தும், பாசியிலிருந்தும் எண்ணெய் எடுப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றதாம்!

இதையெல்லாம் எடுத்து உபயோகப்படுத்தினால் தான் நாம் காலத்தைக் கழிக்க முடியும். இல்லையென்றால் காரைத்தான் தள்ளிக் கொண்டிருக்க வேண்டும். எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்தினால் தான் இனிமேல் நாம் காலத்தைக் கழிக்கமுடியும்.

பலிப்பைன்ஸில் விளக்கு மரம் ஒன்றைக்கண்டு பிடித்திருக்கின்றார்கள்! ஆமாம்! மரங்களிலே அது ஒரு வகை. ''Energy Tree'' என்று அதற்குப் பெயர்வைத்திருக்கிறார்கள். பிலிப்பைன்ஸில் ஏற்கனவே அந்த மரத்திற்கு ''Rum bang Tree'' என்ற பெயர். 50 வருடத்திற்கு முன்னாலேயே இந்த மரத்தைப்பற்றி அவர்களுக்குத் தெரியுமாம். இருந்தாலும் அதன் உபயோகத்தை இப்போது தான் கண்டு பிடித்திருக்கிறார்கள் .அப்படி என்ன உபயோகம்? அந்த மரத்தின் விதை யைக்கொளுத்தினால் 15 நிமிடம் நன்றாக எரியும். பக்கத்தில் பல கிராமங்களிலே ஊர் மக்கள் இதை நிறையப் பொறுக்கி வீட்டிலே வைத்திருப்பார்கள். எதற்கு?

இராத்திரியிலே விளக்குக்குப் பதிலாக இந்த விதையைக் கொளுத்தி வைப்பதற்கு. வெளிச்சத்திற்காக வேறு வழியைத்தேடி அலையவேண்டியதில்லை. வெளிச்சம் என்பது வெளியே மட்டும் இருந்தால் போதுமா? உள்ளேயும் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் வெளியே இருக்கும் வெளிச்சமும் பிரயோசனப்படும்.

ஒருவர் தெருவிலே எதையோ தேடிக்கொண்டு இருந்தார். வழியிலே போனவரும் அவருக்காகப் பரிதாபப்பட்டு தேடிப் பார்த்தார். ஒன்றும் கிடைக்கவில்லை. அதிக நேரம் தேடியும் பிரயோசனம் இல்லாமல் கடைசியாக வழிப்போக்கர், ''எதைத் தொலைத்தீர்கள்?'' என்று கேட்டார். ''என்னுடைய மோதிரத்தை !'' என்றார் இவர். ''எந்த இடத்திலே தொலைத்தீர்கள்'' என்றார். அதற்கு இவர், ''அதோ இருக்கின்றதே என் வீடு, அந்த வீட்டுக்கு உள்ளே தான் தொலைத்தேன்'' என்றார். ''என்ன இது! வீட்டுக்குள் தொலைத்து விட்டு இப்படி வீதியில் வந்து தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். ''அதற்கு நான் என்ன செய்வது? வீட்டிற்குள்ளே வெளிச்சம் இல்லை. இங்கே தான் வெளிச்சம் இருக்கின்றது! வெளிச்சமுள்ள இடத்திலே தேடினால் தான் கிடைக்கும்'' என்றார் இவர். இவ் வெளிச்சம் வீட்டிற்கு உள்ளே மட்டும்தானா? இல்லை!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசியலாளர்களுடன் தென்பகுதி மக்கள் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும்

## ஸ்ரீ.கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர்

(கொழும்பு)

நீண்ட கால இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டு மானால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும்,சகல அரசியல் கட்சிகளும் தென்பகுதி மக்களுடன் புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா கம் யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.குணசேகர நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் 60வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய குணசேகர,வடக்கு-கிழக்குப் பிரச்சினைத் தீர்வுக்கு ஆதரவு வழங்கும் பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு உண்டு.

1981ஆம் ஆண்டு காலப் பகுதியில் காலம் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் சரத் முத்தே கட்டு கம அதிகாரப்பரவலாக்கல் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியிருந்தார் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் ரி.எம். ஜெயரட்ண,லங்கா சம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன்,மேல் மாகாண ஆளுநர் அலவிமௌலான, பல இடது சாரி கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.(தி)

# கட்டடப் பொருட் கூ. தா. இல் பொருட்களுக்குத் தட்டுப்பாடு

## கொள்வனவாளர் ஏமாற்றம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இயங்கி வரும் கட்டப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் கட்டடப் பொருட்களான சீமெந்து , கம்பி, கூரைத்தகடுகள் மற்றும் ஓடுகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதன் காரணமாக இங்கு கட்டடப்பொருட்களைக் கொள்வனவு செய்யச் செல்வோர் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர் எனத் தெரியவருகின்றது.மேலும் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் பெயின்ற் வகைகள் மற்றும் மின் குமிழ்கள் போன்றவை வெளிச் சந்தை விலைகளிலும் பார்க்க அதிகரித்த விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதால் பொது மக்கள் அங்கு அவற்றைக் கொள்வனவு செய்வதில் நாட்டமின்றியுள்ளனர்.

இக் கூட்டுத் தாபனத்தில் விற்பனைக்கென முன்பு கப்பல் மூலமே கட்டடப் பொருட்கள் எடுத்து வரப்பட்டன. ஆயினும், ஏ-9 பாதை திறக்கப்பட்ட கடந்த 15 மாத காலத்தில் தரை வழிப்பாதை வழியாக எந்தவொரு கட்டடப் பொருளும் எடுத்து வரப்படவில்லை எனவும் அறியப்படுகின்றது.

மேலும்,இங்கு தற்போது நாளாந்த விற்பனையிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக் கிளை மூடப்பட்டு விடுமோ என்ற அச்சமும் இப்போது ஏற்பட்டுள்ளது. (உ-77)

## இராசி பலன்

10.07.2003

(ஆனி 26, வியாழன்)

ஏகாதசி-மு.ப. -7.58 வரை
துவாதசி-பி.இ. - 5.34 வரை
விசாகம் மு.ப.-6.17 வரை
அனுசம் பி.இ.-4.42 வரை
இராகுகாலம்- 1.28-2.58
சுபநேரம்- 7.28-8.58
ஏகாதசி விரதம்

**மேடம்**
உடல் நலக்குறைவு,எதிர் பாராத மனஸ்தாபம்,காரிய தாமதம்,அதிகாரிகள் ஒத்துழைப்பு

**இடபம்**
எடுத்த காரியம் கைகூடும்,செய் தொழில் விருத்தி,புதிய பொருள் சேர்க்கை,கீர்த்தி.

**மிதுனம்**
ஆரோக்கியம்,புதிய முயற்சி,பிறர் உதவி, நல்ல சம்பவம்.

**கடகம்**
குடும்பக் கவலை,அஜீரண ரோகம்,பிரயாண தாமதம்,சுப செலவு.

**சிங்கம்**
தன்னம்பிக்கைக் குறைவு, மாதா சுகம், தனவிரயம்,முயற்சி தாமதம்.

**கன்னி**
வாக்கு மேன்மை,மாதர் நட்பு,திடீர் நன்மை, காரிய நன்மை.

**துலாம்**
எந்தக் காரியத்திலும் தாமதம்,கௌரவக் குறைவு,அதிக செலவு,கடும் வார்த்தை.

**விருச்சிகம்**
நல்ல வரவேற்பு,சிந்தனை மிகுதி,முயற்சி கைகூடும்.சயன சுகம்.

**தனுசு**
உணர்ச்சிவசப்படல்,சுபகாரியச் செலவு, கௌரவக் குறைவு,சோம்பல்.

**மகரம்**
நண்பர்கள் சந்திப்பு,மனமகிழ்ச்சி,பொருள் சேர்க்கை, நல்ல காரியம்.

**கும்பம்**
உதவி செய்தல்,அதிகாரம்,தொழில் முன்னேற்றம்,முயற்சி கைகூடும்.

**மீனம்**
எதிர் பாராத செலவு,புதிய திட்டமிடல், காரிய தாமதம்,அதிக பிரயாசை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## வவு.- கொழும்பு இடையிலான

# குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் சேவை இடைநிறுத்தம்

(வவுனியா)

வவுனியாவுக்கும் கொழும்புக்குமிடையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் கடுகதி ரயில் சேவை எதிர்வரும் 13ஆம் திகதியுடன் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தப்படவுள்ளது.

மேற்படி ரயில் சேவையினால் ரயில்வே திணைக்களத்திற்கு பெருமளவு நட்டம் ஏற்பட்டு வருவதனாலேயே இச்சேவை இடை நிறுத்தப்படுவதாக ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி ரயில் சேவை இடைநிறுத்தப்படவுள்ளமை சம்பந்தமாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் போக்குவரத்து அமைச்சருக்கும், ரயில்வே திணைக்களத்திற்கும் அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் ரயில் சேவையை விஸ்தரிக்க வேண்டிய நேரத்தில் அச்சேவையை இடை நிறுத்துவது வட பகுதி மக்களின் போக்குவரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இதேவேளை,மேற்படி ரயில் சேவையில் பயணி ஒருவருக்கு முதலாம் வகுப்புக்கு 270ரூபாவும் இரண்டாம் வகுப்புக்கு 180ரூபாவும் அறவிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-13)

## கொழும்பு-மட்டக்களப்பு

# புகையிரத சேவையை மீண்டும் ஆரம்பிக்க கடும் பிரயத்தனம்

(கொழும்பு)

கொழும்பு-மட்டக்களப்பு ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கள் அன்று இரவு ரயில் நிலையத்திற்குச் சென்ற நபர் ஒருவர் ரயில் சேவையை நடத்தக்கூடாதென அச்சுறுத்தியதை தொடர்ந்து இச்சேவை இடைநிறுத்தப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய கண்காணிப்புக் குழு அதிகாரிகளும், ரயில்வே திணைக்கள அதிகாரிகளும் சந்தித்துள்ளனர்.

இச்சந்திப்பில், ரயில் சேவையை வாழைச்சேனை வரை பிரயாணிகள் எவருமின்றி நடத்துவது எனவும், வாழைச்சேனைக்கு அப்பால் வழமை போல சேவைகளை நடத்துவது எனவும தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தி)

# கணனி வைரஸ் பரப்பும் திட்டம் முறியடிப்பு

கொழும்பு)

இலங்கையில் உள்ள கணனிகளுக்கு சர்வதேச கணனி வலையமைப்பின் ஊடாக வைரஸ் பரப்பும் நோக்கில் சில விஷமிகளினால் தீட்டப்பட்ட திட்டம் பொலிஸாரினால் முறியடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேசப் புலனாய்வுப் பிரிவுகள் ஊடாக கடந்த ஞாயிற்றுக் கிழமை இலங்கைப் பொலிஸ் திணைக்களத்திற்குக் கிடைத்த மேற்படி தகவலை அடுத்து அன்றைய தினம் கொழும்பில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து, சகல பொலிஸ நிலையங்களிலும் உள்ள கணனிகளின் வலையமைப்புக்களின் (இன்ரநெற்) தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

இருப்பினும் இது தொடர்பான அச்சம் தணியாமையினால் கணனிகளை உபயோகிப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேசமயம்,இந்த வைரஸ் வெளிநாட்டில் இருந்து உருவாக்கப்பட்டு, அங்குள்ள கணனி வலைப்பின்னலூடாகவே பரப்பப்படவிருந்ததாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. (உ-10)

# இரட்டைத் தட்டுப் படகு கவிழ்ந்து 600 பேர் மூழ்கிப் பலியாகினர்

## பங்களாதேஷில் நடந்துள்ள கோரம்

(டாக்கா)

பங்களாதேஷில் நேற்று இரட்டைத் தட்டு படகு ஒன்று கவிழ்ந்ததால் 600 பேர் மூழ்கி மரணமாகியுள்ளனர்.

மெக்னா ஆற்றில் பொங்கிப் பாயும் வெள்ளத்தில் போய்க்கொண்டிருந்த இந்தப் படகில் 750க்கும் மேற்பட்டவர்கள் பிரயாணம் செய்துள்ளனர்.

படகு கவிழந்த போது அதன் மேல்தட்டில் இருந்தவர்களான 150 பேர் மட்டும் உயிர் தப்பியுள்ளனர். இவர்களில் பலர் நீந்திக் கரை சேர்ந்தனர். பலர் மீட்புப் பணியாளர்களால் காப்பாற்றப்பட்டனர்.

ஏனைய 600பேரும் ஆற்றில் மூழ்கி மரணத்தைத் தழுவிக் கொண்டதாக அஞ்சப்படுகிறது.

இப்படகு நேற்று முன்தினம் இரவு வேளையில் டாக்காவில் இருந்து பாரிசால் நோக்கிப் போய்க் கொண்டிருந்ததாகவும் அவ்வேளையிலேயே அது கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாகவும் கூறப்படுகின்றது.

பங்களாதேஷில் கடந்த சில தினங்களாகக் கடும் மழை பெய்து வருவதால் ஆறுகள் யாவும் பொங்கிப் பாய ஆரம்பித்துள்ளன.

WORLD NEWS உலக தரிசனம்

## அஸாமில் ஆறுகள் சீற்றம்;

# வெள்ளம் மண்சரிவால் மக்கள் துன்பம்

(புதுடில்லி)

அஸாம் மாநிலத்தில் வெள்ளத்தின் சீற்றம் இன்னமும் தணியவில்லை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் விடாமல் மழை பெய்வதால் பிரமபுத்திரா உட்பட பெரும்பாலான நதிகளில் நீர் மட்டம் அபாய அளவிற்கு மேலே உயர்ந்து 2 ஆயிரத்துக்கும் அதிகமான கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

19 மாவட்டங்களில் சுமார் 12 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2லட்சம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பயிர்கள் சேதமடைந்துள்ளன. மேற்கு வங்காளம் மாவட்டத்தில் 50 ஆயிரத்திற்குமதிகமான மக்கள் வெள்ளத்தின் சீற்றத்திற்கு இலக்காகி இருப்பதால் இராணுவம் உதவிக்கு அழைக்கப்பட்டுள்ளது.

டார்ஜிலிங் மாவட்டத்தில் திங்கட்கிழமை இரவில் இருந்து மண்சரிவுகளும், திடீர் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டதால் 23 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு வங்காளத்தில் கடந்த 36 மணி நேரமாக இடைவிடாமல் மழை பெய்து இயல்பு வாழ்க்கை தடைப்பட்டுள்ளது.

உயர் அதிகாரிகள் அங்கு விரைந்துள்ளனர். டார்ஜிலிங் இதுவரை சடலங்கள் மண்சரிவுகளிலிருந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளன. மேலும் பலரைக் காணவில்லை. டார்ஜிலிங்கிற்கும் சிலிக்குரிக்குமிடையே தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. (பி-9)

## 500 ஆண்டுகள் பழமையான மகாவீரர் சிலை

(டேராடூன்)

உத்தராஞ்சர் மாநிலத்தில் 500 ஆண்டுக்ளுக்கு முற்பட்ட ''அஷ்ட தாது''வினால் ஆன மகாவீரர் சிலையை பொலிஸார் சனிக்கிழமை மீட்டனர்.

சர்வதேச சந்தையில் இதன் மதிப்பு ரூபா 50 லட்சம். 3 கிலோ எடை கொண்ட இந்த சிலை நேபாளத்திலிருந்து கடத்திவரப்பட்டது.

உடதம்சிங் நகர் மாவட்டத்தில் சிதார்கஞ்ச் பஸ் நிலையத்தில் நின்றிருந்த முகமது கனீப் என்பவரிடம் இருந்து இந்த சிலையை பொலிஸார் பறிமுதல் செய்தனர். (பி)

ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த 100வது ஆண்டு நிறைவு விழா ஒஹியோவின் டேடன் நகரில் நடைபெற்று வருகின்றது. அதன் ஒரு நிகழ்ச்சியாக பலூன்களில் பறந்து வீரர்கள் விழாவினைக் கொண்டாடிய காட்சி.



## பதவியை துறப்பதாக அப்பாஸ் அச்சுறுத்தல்

(ரெல்அவிவ்)

பலஸ்தீனப் பிரதமர் மொஹமட் அப்பாஸ் தனது பதவியை இராஜினாமாச் செய்யப்போவதாக தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுடனான சமாதான நடவடிக்கைகளை சரியான முறையில் கொண்டு செல்லவில்லை என்று அவரது பாத் கட்சிக்குள்ளேயே விமர்சனங்கள் எழுந்துள்ளதை அடுத்து அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான பலஸ்தீனக் கைதிகளை விடுவிப்பதற்கு அப்பாஸ் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டார் என்று அவரது கட்சிக்குள்ளேயே குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பிரதமர் பதவியை மட்டுமல்லாது கொள்கை திட்டமிடல் செயற்குழுவில் இருந்தும் விலகத் தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ளார். (பி-9)

# தலையொட்டிப் பிறந்த சகோதரிகள்அறுவை சிகிச்சை செய்துகொள்வதில் விடாப்பிடியாக இருந்துள்ளனர்

(சிங்கப்பூர்)

உயிர்போனாலும் பாதகமில்லை அறுவை சிகிச்சை நடந்தே ஆகவேண்டும் என்று தலை ஒட்டிப்பிறந்த ஈரானிய சகோதரிகள் அடம்பிடித்ததாக அறுவைச் சிகிச்சை நடத்திய டாக்டர்கள் கூறியுள்ளனர். ஏழ்மையில் பிறந்த இவரகள் ஒரு டாக்டர் தம்பதியின் பராமரிப்பில் வளர்ந்தார்கள்.

ஈரான் நாட்டைச் சேர்ந்த இவ் இரட்டைச் சகோதரிகள் லாலே பிஜானி மற்றும் லேடன் பிஜானி 29 வயதாகும் சகோதரிகள் பிறக்கும் போதே தலையொட்டிப் பிறந்தவர்கள். தலைகள் ஒட்டியே இருந்ததால் இயல்பு வாழ்க்கை நடத்த சகோதரிகள் இருவரும் மிகவும் சிரமப்பட்டனர். ஒருவரின் உதவி இல்லாமல் மற்றொருவரால் இயங்க முடியாததால் சொல்லொணாத் துயரத்தில் அவதிப்பட்டனர். எந்த வேலைக்கும் ஒருவருக்கு மற்றொருவரின் உதவி தேவைப்பட்டது.



இருந்தாலும் விட்டுக்கொடுத்து தியாகங்கள் செய்து வாழ்க்கையை நகர்த்தி வந்தனர். உலகமே இச்சகோதரிகளை வியப்புடன் உற்று நோக்கிவந்தது.

தெற்கு ஈரானைச் சேர்ந்த பிஜானிகளின் குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம். இவர்களின் பெற்றோர்களுக்கு மொத்தம் 11 குழந்தைகள். இரட்டைச் சகோதரிகள் இருவரும் ஒரு டாக்டர் தம்பதிகளின் கண்காணிப்பில் வளர்ந்து வந்தனர்.

படிப்பிலும் படு சுட்டியாக விளங்கிய இச் சகோதரிகள் சட்டப் படிப்பினை வெற்றிகரமாக முடித்திருந்தனர்.

உடலில் இணைந்திருந்தாலும்.... உள்ளங்களால் வேறுபட்ட இச்சகோதரிகள் பிரிந்துவிட முடிவு செய்தனர். இதற்கு மேலும் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்ட சகோதரிகள் கடந்த 96ஆம் வருடம் ஜெர்மன் நாட்டு அறுவைச் சிகிச்சை நிபுணர்களை அணுகி தங்களுக்கு அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினர்.

ஆனால் ஜெர்மன் டாக்டர்களோ அறுவைச் சிகிச்சை மிகவும் சிக்கலானது. அறுவைச் சிகிச்சை மேற்கொண்டால் அது உயிருக்கே ஆபத்தாகிவிடும். தங்களால் முடியாது என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டனர்.

பிறகு கடந்த வருடம் சிங்கப்பூர் டாக்டர் கோ, நேபாள குழந்தைகளுக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்த தகவல் வெளியானது. அடுத்த நிமிடமே சகோதரிகள் விமானமூலம் சிங்கப்பூருக்குப் பறந்தனர். டாக்டர் கோவைச் சந்தித்து தங்களுக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றனர்.

அவர்களை சமாதானப்படுத்த டாக்டர் கோ மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியைத் தழுவின. என்ன சொன்னாலும் கேட்கிற நிலையில் இல்லை இரட்டைச் சகோதரிகள். உயிரே போனாலும் பரவாயில்லை. அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளுங்கள். எந்த ஆபத்தையும் எதிர்நோக்க தயாரென்று சகோதரிகள் அடித்துக் கூறவே டாக்டரும் துணிந்தார்.

இந்த அறுவைச் சிகிச்சை குறித்து உலகின் தலைசிறந்த மருத்துவ நிபுணர்களிடம் அவர் ஆலோசனை மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் அறுவைச் சிகிச்சைக்கு அவர் சம்மதித்தார்.

இதனையடுத்து நவம்பர் மாதம் சிங்கப்பூர் ரேபிள்ஸ் மருத்துவமனையில் சகோதரிகள் இருவரும் அனுமதிக்கப்பட்டனர். யூலை மாதம் அறுவைச் சிகிச்சை என்று அப்போதே திகதி அறிவிக்கப்பட்டது.

### விடாப்பிடியாக இருந்தனர

ஞாயிற்றுக்கிழமை அறுவைச் சிகிச்சையையொட்டி சனிக்கிழமை காலை அவர்கள் சத்திரசிகிச்சைக்குத் தயாராகினர். அன்று மட்டும் அவர்களுக்கு 300க்கும் மேற்பட்ட ஸ்கேன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. மூளைப்பகுதி, கழுத்து மற்றும் தலைப்பகுதி குறித்து டாக்டர்கள் துல்லியமாக ஆராய்ந்தனர். அப்போதுகூட பிரபல அறுவை சிகிச்சை நிபுணர் ஒருவர் எதற்கு சத்திரசிகிச்சை? சேர்ந்தே இருந்துவிடுங்கள் என்று கடைசி முயற்சியாக ஆலோசனை கூறினார்.



இதற்கும் சகோதரிகள் அசைந்து கொடுக்கவில்லை. தொடர்ந்து தலை மழிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சை அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். அறைக்கு செல்லும் வரை சகோதரிகள் கலகலப்பாக அரட்டையடித்துக் கொண்டு இருந்தனர்.

சகோதரிகளை உட்கார்ந்த நிலையில் இருக்கச் செய்து அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மயக்கமருந்து வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டு அறுவைச் சிகிச்சை தொடங்கியது. பின்னணியில் சாஸ்திரிய சங்கீதம் ஒலிக்க அறுவைச்சிகிச்சை நடைபெற்றது.

3வது நாளாக, ஒட்டி இருந்த தலைகளை பிரிக்கும் முயற்சியில் டாக்டர்கள் ஈடுபட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக தலைகள் பிரித்தெடுக்கப்பட்டன. இறுதியாக தலைகளை இணைத்திருந்த மண்டையோட்டின் கடைசிப் பகுதியை டாக்டர்கள் பிரித்தபோது ரத்தம் பீறிட்டதில் பெரும் இரத்த இழப்பு ஏற்பட டாக்டர்கள் பீதியடைந்தனர். அவர்களின் முகத்தில் இறுக்கம் பரவியது. உடனடியாக அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இரத்தம் செலுத்த ஆரம்பித்தனர். ஆனால் நொடி நேரத்தில் இரத்தம் பீறிட்டுக்கொண்டு வெளியேறியதில் இரட்டையர்களில் மிகவும் சுறுசுறுப்பான லேடன் உடனடியாக மரணமடைந்தார். அதிர்ச்சியடைந்த டாக்டர்கள் உடனடியாக சுதாரித்துக்கொண்டு மற்றொரு சகோதரியான லேலேவைக் காப்பாற்ற பகீரத முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் அந்த முயற்சியும் பலனளிக்காமல் 90 நிமிட இடைவெளியில் அவரும் உயிரிழந்த போது அந்த துக்கம் தாளாமல் டாக்டர்களும் தாதியரும் கதறியழுது விட்டனர்.

இந்தச் செய்தியை எப்படி இரட்டையரின் குடும்பத்தினருக்கு சொல்லுவதென்று தவித்துவிட்டனர்.

தலைகள் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டவுடன் இரத்தக்குளாய்களைப் பிரித்தெடுக்கும்போது அளவுக்கு அதிகமாக எதிர்பாரர்ததை விட இரத்தம் பீறிட சகோதரிகள் மரணத்தை தழுவியதாக மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

தாங்கள் எதிர்பார்த்ததைவிட சிக்கலான பிரச்சினைகள், இரத்த அழுத்த மாறுபாடுகள் தோன்றியதால் தோல்வியைச் சந்திக்க நேரிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அறுவைச் சிகிச்சை நடைபெற்ற சிங்கப்பூர் ராபிள்ஸ் மருத்துவமனை சோகத்தில் மூழ்கி தவிக்கிறது. டாக்டர்கள் மற்றும் தாதியரால் கூட அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை.

### ஈரானில் சோகம்

அறுவைச் சிகிச்சையின் சோக முடிவு உலக மக்களை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. சகோதரிகளின் சொந்த நாடான ஈரான் நாட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டு சகோதரிகள் செய்தியைக் காண்பித்து வருகின்றனர். ஈரான் அதிபர் கடாமி அதிர்ச்சியடைந்த நிலையில் காணப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அறுவைச் சிகிச்சை வேதனையில் முடிந்தது ஒரு பரிதாபகரமான சோகம். (பி)

# தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் 30 பேர் படுகொலை

## மதனராஜா எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அண்மைக்காலங்களாக ஈ.பி. டி.பி,ஈ.பி ஆர். எல்.எவ், புளொட் மற்றும் ரெலோ ஆகிய தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்கள் 30 பேர் இனந் தெரியாத நபர்களினால் கொல்லப் பட்டுள்ளனர். இதனைக் கண்டித்து தமிழ்க்கட்சிகள் அனைத்தும் குரல் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா மதனராஜா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய மதனராஜா ,

இவ்வாறு கொலை செய்யப் பட்டவர்களின் குடும்பங்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ கருத்துத் தெரிக்கையில்,

எந்தவொரு கொலைச் சம்பவத்தையும் எமது கட்சி கடுமையாக கண்டிக்கிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் நோக்கமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் கொலை மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடும் கட்சி உறுப்பினர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவர் என தீர்மானம் எடுக்கப்பட்டதும் தெரிந்ததே. (தி)

# விஸா அனுமதி கோரும் இலங்கையரின் கைரேகைகளை பதிய பிரி.தூதரகம் நடவடிக்கை

(கொழும்பு)

பிரிட்டிஷ் தூதரகத்தில் விஸா அனுமதிக்காக விண்ணப்பிக்கும் இலங்கையர்களின் கைரேகைகள் பதிவு செய்யப்படவுள்ளன.

பிரிட்டனில் இலங்கையர்கள் சட்ட விரோதமாக குடியேறுவதையும் தஞ்சம் கோருவதையும் தடுக்கும் பொருட்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாக பிரிட்டிஷ் குடிவரவு அமைச்சர் வெவலகியூஸ தெரிவித்துள்ளார்.

கடந்த 6 மாதகால அவதானிப்பின் பின்னர் அமுல் படுத்தப்படவுள்ள இத்திட்டம் இம்மாத இறுதியில் இருந்து கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் நடை முறைப் படுத்தப்படவுள்ளது.

பிரிட்டிஷ் விஸாவுக்காக விண்ணப்பிக்கும் இலங்கையர்கள் பற்றிய தகவல்கள் பதிவு செய்யப்படுவதுடன், விண்ணப்பதாரர்கள் பற்றிய முழு விபரங்கள் பொலிஸ் மற்றும் சட்ட அமுலாக்கல் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

பிரிட்டனுக்குச் சென்ற பின்னர் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து புகலிடம் கோரி அல்லது குடியேற்ற விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் நபர்களை கண்டறியும் பொருட்டும் இவர்களை கண்டுபிடித்து மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கும இத திட்டம் உதவும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# பாதுகாப்புக் கெடுபிடிகள் வடமராட்சியில் அதிகரிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் கடந்த சில தினங்களாக வீதி மறிப்புச் சோதனைகள் உள்ளூராட்சி ரோந்துகள் என்பவற்றை படையினர் அதிகரித்துள்ளனர்.

திடீரென வீதிகளில் வந்து குவியும் படையினர் மற்றும் பொலிஸார் வாகனங்களில் எடுத்து வரப்படும் மரக்குற்றிகள் ஏனைய வீதித்தடை பொருட்களை வீதிகளில் போட்டு பாதையை தடை செய்வதுடன், அதனூடாக போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் மற்றும் பொதுமக்களை துருவித்துருவி சோதனையிடுகின்றனர்.

அத்துடன், குடிமனைப்பகுதிகளில் இரவு பகல் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

வடமராட்சியின் வதிரி, உடுப்பிட்டு, மந்திகை, நெடியகாடு ஆகிய பகுதிகளிலேயே படையினரின் இவ்வித நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகிறது.(உ-52)

## நெதர்லாந்தில் மரணமடைந்த அம்பன் வாசியின் இறுதி ஆசையை நிறைவேற்ற படையினர் தடை

(பருத்தித்துறை)

வடமராட்சி பொற்பதி கடலில் இறந்தவர்களின் அஸ்தியை கரைப்பதற்கு இரணுவம் தடை விதித்துள்ளது.

வடமராட்சி அம்பனைச் சேர்ந்த சுப்பிரமணியம்- குணரத்தினசிங்கம் (வயது60) என்பவர் ஒருவாரத்திற்கு முன்பு நெதர்லாந்தில் மரணமடைந்தார். இறப்பதற்கு முன் தனது அஸ்தியை தனது சொந்த ஊரில் இறுதிக்கிரிகைகள் நடைபெறும் பொற்பதி கடலில் கரைக்குமாறு தனது மகனைக்கேட்டுக்கொண்டதற்கமைய அவரது அஸ்தி நெதர்லாந்திலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டது.

பொற்பதி கடலுக்கு இவரின் அஸ்து கரைக்கக் கொண்டு செல்லப் பட்டபோது,இவர்களைத் தடுத்து நிறுத்திய அப்பகுதி இரணுவம்,மீனவர் மாத்திரம் கடலுக்குள் செல்ல அனுமதி உண்டு. வேறு எவரும் அங்கு செல்ல அனுமதி இல்லை என கூறியதற்கமைய பருத்தித்துறை வங்கக்கடலில் அஸ்தி கரைக்கப்பட்டது.

வழமையாகப் பொற்பதி கடலில் இறுதிச் சடங்குகளை நிறைவேற்றி வந்த மக்கள் இராணுவத்தின் தற்போதைய தடை உத்தரவால் பெரும் வசனமடைந்துள்ளனர். (உ-52)

# உள்ளூராட்சி முறை குறித்து ஆராய இந்தியா பயணம்

(களுத்துறை)

இந்தியாவிலுள்ள உள்ளூராட்சி முறை மற்றும் அதன் செயற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக களுத்துறைப் பகுதியில் யு.என்.பி. அதிகாரத்திலுள்ள பல உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள் இந்தியாவுக்கு சென்றுள்ளனர்.

களுத்துறை மாவட்ட எம்.பி.யாகவும் இருந்து வரும் தொழில மைச்சர் மகிந்த சமரசிங்க விடுத்த கோரிக்கையின்பேரில் இந்த யு.என்.பி உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள் இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள உள்ளூராட்சி முறைகளை ஆராய்ந்து அறிவுபெறுவதற்கு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது.

பேருவளை, களுத்துறை, பாணந்துறை, ஹொரணை, வெல்லா விட்ட, அகலவத்தை,புலாத்சிங்கள பண்டாரகம ஆகிய உள்ளூராட்சி, பிரதேச சபைகளின் தலைவர்கள் இதற்காக இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். (பி)

# செய்தித் துளிகள்

## பட்டமளிப்பும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவ பரிபாலன சபையின் பரிசளிப்பு விழாவும் பட்டமளிப்பு வைபவமும் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு நீராவியடி நாவலர் கலாசார மண்டபத்தில் சபைத் தலைவர் இ.மகேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், யா/இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு, சைவ பரிபாலன சபையால் 2002ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சைவ சித்தாந்த பிரவேச, பால, பண்டிதர் தேர்வில் சித்தி பெற்றவர்களுக்கு பட்டம் வழங்கிக் கௌரவிப்பார். (உ-15)

## ஆண்டு விழா

(கல்வயல்)

அரியாலை சனசமூக நிலையத்தின் 54வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 12ஆம்திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம், மேற்படி சனசமூக நிலையத்தினரால் அண்மையில் நடாத்தப்பட்ட ஆண்டு விழாவையொட்டிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (உ-36)

## சைவசமய பாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில், வலயக் கல்விப் பணிப்பாளர்களின் வழிகாட்டலுடனும் அனுமதியுடனும் தரம் 1-5 வரை சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ''சைவ சமயபாடக் கருத்தரங்கு'' நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், 14ஆம் திகதி திங்கட்கிழமை யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியிலும், 19ஆம் திகதி வேலணை துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்திலும் காலை 8.30 மணி முதல் இக் கருத்தரங்கு நடைபெறவுளளது. (உ-15)

## அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதி அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்று எதிர்வரும் 14,15ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக இந்து கலாசார விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தெரிவித்தார்.

கரம்பன் சண்முகநாத வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட வழிகாட்டல் வகுப்புக்களும் நடைபெறவுள்ளன.

இதேவேளை,தென்மராட்சி, வடமராட்சி,வலிகாமம் ஆகிய வலயங்களுக்கும் இம்மாத முடிவுக்குள் இக் கருத்தரங்குகள் இந்து கலாசார அமைச்சினால் நடாத்தப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (உ-4)

## நடமாடும்சேவை

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 15ஆம்திகதி செவ்வாய்க்கிழமை ஆட்பதிவுத் திணைக்களத்தினால் நடமாடும் சேவை ஒன்று இடம்பெறவுள்ளது.

எனவே,தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது அடையாள அட்டைகளைத் தவற விட்டவர்களும் இதுவரை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து கிடைக்கப்பெறாதவர்களும அடையாள அட்டைகளைப் பெறுவதில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குபவர்களும் அன்றைய தினம் இச்சேவையில தவறாது கலந்து கொண்டு பயனடையுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-36)

## யோகாசன வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தரால், வெள்ளி, சனி தவிர்ந்த நாட்களில் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் காலை 6.30மணி தொடக்கம் 7.30 மணி வரை ஆண்,பெண் இருபாலாருக்கும் யோகாசன வகுப்புக்கள நடத்தப்பட்டு வருகின்றன. (உ-15)

## கார்த்திகேசன் நினைவு நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முன்னோடியும்,வடபுல ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதார புருஷருமான காலஞ்சென்ற தோழர் எம். கார்த்திகேசனின் நினைவு நூல் அறிமுக விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன் தலைமையில நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், நூல் அறிமுகத்தை வடகிழக்கு மாகாண முன்னாள் கல்விப்பணிப்பாளர் க.கந்தசாமியும், கருத்துரைகளை இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவர் ச. தியாகலிங்கம், ஜி.சி.எஸ்.யு.யாழ்.கிளைத் தலைவர் இ. தவராசா, சொ.சிவபாலன்,தபால் திணைக்கள முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர் சி.மார்க்கண்டு மற்றும் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி எஸ்.டி.பி.இராஜேஸ்வரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (உ-8)

## கல்வி விருத்திக்கு யுனெஸ்கோ நிதி உதவி

(கொழும்பு)

தென்னிலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டுகென யுனெஸ்கோ நிறுவனம 25ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட 6 மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைக் கட்டடங்கள் புனரமைப்பு மற்றும் பாடசாலை உபகரணங்களின் கொள்வனவுக்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது என யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவின் இலங்கைச் செயலாளர் மகிந்த அபயவர்த்தன தெரிவித்துள்ளார். (தி)

## விதவைகள் மேம்பாட்டுக்கு உதவி

(சுதுமலை)

கடந்தகால யுத்தம் காரணமாக கணவனை இழந்து வாழும் ஆனைகோட்டை சாவற்கட்டுப் பகுதி விதவைக் குடும்பங்களின் நலனைக் கருத்திற் கொண்டு இந்து விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் 1 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

இந் நிதியுதவியுடன் விதவைக் குடும்பங்களின் சுய தொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் முகமாகவும் மற்றும் இக்குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இரவு நேரக் கல்வி பயில்வதற்கு ஏதுவாகவும் கட்டடமொன்றை விதவைகள் மலர்வு மையம் வழங்கியுள்ளது.

அத்துடன்,இக்கட்டடத்தை கியூடெக் அமைப்பின் இயக்குநர் ஜெயககுமார் அடிகளார் மீள் புனரமைப்புச் செய்வதாகவும் உறுதியளித்துள்ளார். (உ-252)

## வீதியை மறித்து படையினர் சோதனை

(திருநெல்வேலி)

வல்வெட்டித்துறை நெடியகாட்டுப்பகுதியில் கடந்த திங்களன்று படையினரும் பொலிஸாரும் இணைந்து முட்கம்பிச்சுருள்களைப்போட்டு வீதிகளை மறித்ததுடன்,அதனூடாகச்சென்ற மக்களையும் சோதனை செய்துள்ளனர்.

அதேவேளை,அவ்வீதியால் வந்த விடுதலைப்புலிப் போராளிகளையும் இடைமறித்து தீவிர சோதனைகளை மேற்கொண்டதாகத்தெரியவருகிறது. (உ-43,45)

## விதைநெல் அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

மண்கும்பான், அல்லைப்பிட்டி விவசாயிகளுக்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் விதைநெல், முட்கம்பி, கம்பிக்கட்டை ஆகியற்றை வழங்கியுள்ளது.

அண்மையில் அப்பகுதிகளில் மீளக்குடியேறியுள்ள விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் முகமாக விதைநெல் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, அப்பகுதியில் பெருகியுள்ள கட்டாக்காலிகளிலிருந்து பயிரைப் பாதுகாப்பதற்காக முட்கம்பி, கம்பிக்கட்டை ஆகியனவும் வழங்கப்பட்டுள்ளன. (க-75)

## திருடர் பிடிபட்டனர்

(ஊர்காவற்றுறை)

சரவணைப் பகுதியில் வீட்டு உபகரணங்களை திருடும் நடவடிக்கையில் ஈடுபடும் இருவர் கடந்த சனியன்று பிடிபட்டுள்ளனர்.

குறிப்பிட்ட பகுதியில் வீட்டுக் கதவுகள், உபகரணங்கள் ஆகியவற்றைத் திருடும்போதே இவர்கள் இருவரும் கையும் மெய்யுமாக பொதுமக்களால் பிடிக்கப்பட்டுள்ளனர். அவ் இருவரும் பின்பு தீவக கோட்ட அரசியற்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (க-75)

## 20 பொலிஸ் சுப்பிரெண்டுகளுக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

பொலிஸ் சுப்பிரெண்டுகள் 20 பேர் சிரேஷ்ட சுப்பிரெண்ட்களாக பதவி உயர்த்தப்ட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சேவைமூப்பு மற்றும் திறமையின் அடிப்படையிலேயே இப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (க-ச)

## ஆசிரியர்கள் அலைச்சல்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதி பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சம்பளம் தற்போது காசோலையாக வழங்கப்படுவதால் இக் காசோலைகளை மாற்ற சாவகச்சேரி, பருத்தித்துறைப் பகுதிகளுக்கு இவ் ஆசிரியர்கள் செல்ல வேண்டியிருப்பதாக, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்திடம் முறையிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தற்காலிக வங்கி கருமபீடம் ஒன்றை மருதங்கேணிப பகுதியில் இயங்க வைக்குமாறு நிதிஅமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-43)

## பௌத்தபிக்குகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சார்பாக செயற்படுவதனால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமெனக்கோரி தேசிய பிக்குகள் முன்னணியினர் கொழும்பில் கடந்த திங்களன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

சுமார் ஆயிரக்கணக்கான புத்த பிக்குகள் கறுப்புக்கொடிகளையும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எதிரான கோஷங்களையும் எழுப்பியவாறு கொள்ளுப்பிட்டியில் உள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு காரியாலயம் முன் இந்த ஆர்ப்பாட்டத்தைச் செய்தனர். (வ)

## வீதியருகேகிடங்கு பயணிகள் வீண்சிரமம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் பாரிய கிடங்கொன்று நீண்ட நாட்களாக காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியால் செல்வோர் பலத்த சிரமத்திற்குள்ளாவதையும் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக வுளளது. (உ-51)

யாழ்ப்பாணம் — வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்



# 10-07-2003

## வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வரலாறு

உலகளந்த பெருமாளாகி உலகை உய்விக்க வந்த திருமாலே யாழ் நகரில் வண்ணையம்பதியில் ஸ்ரீதேவி, பூமதேவி சமேதராக வீற்றிருந்து அருள் ஆட்சிபுரியும் ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆவர்.

இத்தேவஸ்தானம் 14ம் நூற்றாண்டில் அமையப் பெற்ற தமிழ் மன்னன் ஆகிய குணபூசனசிங்கை ஆரியன் காலத்து நெசவுத் தொழிலை விருத்தி செய்ய வந்த வைசியத் தோன்றல்கள் ஆகிய பத்மசாலிச்செட்டிப் பிள்ளைகளின் வம்சத்து உதித்த அடியார்க்கு நல்லான் என்பவரினால் வைத்து வணங்கப் பெற்ற தாம்பரவிக்கிரகமாகிய ஆதிவேங்கடேசப் பெருமாளே இத்தேவஸ்தானத்தின் முதன் முதற் தோற்றுவா மூர்த்தியாவர்.

இத்தேவஸ்தானமும் இதனை அண்மிய நிலப்பரப்பும் அக்காலத்து அடியார்க்குநல்லான் வரம்பு என அழைக்கப் பெற்றது. அக்காலத்து இது சிறிய கோவிலாக அமையப் பெற்று, போத்துக்கேயரது ஆட்சிக் காலத்து கத்தோலிக்க சமய ஊடுருவலினால் இவ்வாலயம் அழியப் பெற்று, ஒல்லாந்தார் காலத்து புனர்நிருமாணம் பெற்று ஒரு சிறிய கோவில் உருவில் அமையப் பெற்றது. இதன்பின் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி 1835ம் ஆண்டளவில் இச்சாகியத்தினரின் நன் முயற்சியும், வைணவ பேற்றின் காரணமாகவும் இவர்களில் வசதி படைத்தோர்அளித்த நன்கொடைக் காணிகளின் விஸ்தீரணத் தன்மையினால் மஞ்சனக் கிணறு, மகா மண்டபம் மடப்பள்ளி, நவக்கிரக ஆலயம் முதலியன தோன்றப் பெற்றன. கி.பி 1840ம் ஆண்டளவில் ஸ்ரீமகாலட்சுமி சநநிதி வசந்த மண்டபம், யாகசாலை முதலியனவும் கொடிஸ்தம்பம், வாகனங்கள், தீர்த்தக்கேணி முதலியன ஸ்தாபிக்கப் பெற்றும் உற்சவ மூர்த்தி தாம்பரத்தில் வார்க்கப் பெற்று, கி.பி 1878ம் ஆண்டில் மகோற்சவ வைபவம் தொடாங்கலாயிற்று. இதன்பின் கி.பி 1905 ஆண்டு காலத்தில் ஸ்ரீவேணுகோபாலர், ஸ்ரீராமர், சீதை, லக்குமணன், ஸ்ரீஆஞ்சநேயர் முதலிய விக்கிரகங்கள் தாம்பரத்தில் வடிக்கப் பெற்றன.

1910ம் ஆண்டில் உள்சுற்றுப் பிரகாரம் முழுமையும் ஓட்டினால் வேயப்பட்டது. கி.பி 1910 முதல்1912ம் ஆண்டு காலப்பகுதியில் வெளிமண்டபம் உருவாக்கப் பெற்றது. கி.பி 1912ம் ஆண்டிலேயே ஸ்ரீஆண்டாள் சந்நிதியும்ஸ்தாபிக்கப் பெற்றது. 1941ம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் ஒன்று மூலமூர்த்திகட்கும் பரிவார மூர்த்திகட்கும் நவக்கிரக கோவிலுக்கும் நடைபெற்றன. இதேபோன்று 1972 கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1948ம் ஆண்டில் ஸ்ரீரங்கநாதசுவாமி இந்தியாவில் உருவாக்கப் பெற்று ஸ்தாபிக்கப்பட்டது.1950ல் வெளிவீதியில் ஆஞ்சநேயர் கோவில் உருவாக்கப்பெற்றது.

1960ல் சித்திரத்தேர் உருவாக்கப்பெற்று அவ்வருடத்திலேயே தேரில் சுவாமி எழுந்தருளினார். 1972ம் ஆண்டில் பிற்பகுதியில் இராஜகோபுரவேலைகள் ஆரம்பிக்கப் பெற்று 1978ம் ஆண்டிலேயே மணிக்கோபுர வேலைகளும் நிறைவு பெற்று பெரிய கண்டாமணி பொருத்தப்பெற்று இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1998ஆம் ஆண்டில் ஸ்ரீரங்கநாதர் கோபுரவேலை தொடங்கப் பெற்று 2003ஆம் ஆண்டில் நிறைவுபெற்று இதற்குரிய கும்பாபிஷேகமும், மூலமூர்த்திகட்கும் புதிதாக உருவாக்கப்பெற்ற ஸ்ரீசந்தான கோபாலர், ஸ்ரீவேணுகோபாலர், ஸ்ரீராமர். ஸ்ரீஆஞ்சநேயர் மற்றும் பரிவாரமூர்த்திகட்கும், நவக்கிரக சந்நிதிக்கும் கும்பாபிஷேகம் நடைபெறப் பகவான் ஸ்ரீமந் வேங்கடேச வரதராஜப் பெருமாள் திருவுள்ளங் கொண்டுள்ளார்.

10.07.2003 நடைபெறும் வண்ண ஸ்ரீவேங்கட வரதனதுமகாகும்பாபிஷேகத்தை கண்டுகளிக்க யாழ் குடாமக்கள் அனைவரும் பங்குபெற வேண்டும் என்பது பகவான் நாராயணனதும் எமது தேவஸ்தான மகா சபையினதும் பெருவிருப்பாகும். ஸ்ரீரங்கனது பஞ்சதளகோபுர தரிசனத்தையும் ஸ்ரீவேங்கடவரதனது மகாகும்பாபிஷேகத்தையும் கண்டு சேவிப்போருக்கு ஸ்ரீமந் நாராயணன் நன்நெறி காட்டுவான். நன்நிதி வழங்குவான், நல்வாழ்வு அளிப்பான் நன்நலம் தருவான் நற்பேறு அருள்வான், நாராயணன் நாமம் நாள்தோறும் ஓதுபவர் நற்கதி பெறுவர்.

*வி.என்.சி.நாராயணசாமி,*
*முன்னைநாள் தலைவர்,*
*தேவஸ்தான மகா சபை.*

## ஆலய பிரதம குருவின் ஆசியுரை

*"கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர்*
*எண்ணும் திருநாமம் திண்ணம் நாராயணமே"*

பரம் பொருளாகிய இறைவன் உலகின் கண் வாழும் ஜீவராசிகளுக்கு அருள் புரிவதற்காக ஆலயங்கள் தோறும் உருவத்திருமேனி கொண்டு வீற்றிருக்கின்றான் ஆன்மா லயப்படும இடம் ஆலயம் ஆகும். ஆலயத்தில் வீற்றிருக்கும இறைவனின் திருவருள சக்தியை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு மஹா கும்பாபிஷேகம், மஹோற்சவம், இலட்சார்ச்சனை முதலிய கிரியை நிகழ்த்தப்படுகின்றன. இக்கிரியைகளின் மஹாகும்பாபிஷேகம்மிக உன்னதமான கிரியை ஆகும் 12ஆண்டுகளிற்கு ஒருமுறை மகாகும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென ஆகமங்கள் வலியுறுத்துகின்றன. சிறப்பும் மகத்துவமுமான இவ் விழாவினை காண நாம பெரும்பேறு பெற்றிருக்க வேண்டும். இவ் வகையில் வண்ணையில் வீற்றிருந்து அருள்பாலக்கின்ற இரட்சக மூர்த்தி ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் மஹாகுமபாபிஷேக குடமுழுக்கு நன்னீராட்டு விழா இன்று சிறப்புற நிகழ்கின்றது இந்த பொன் நாளிலே எம் மக்களின் வாழ்வில் நீடிதத அமைதியான வாழ்வும் அன்பும், சகோதரதத்துவமுமமலர்ந்து அனைவரும் ஷேமமாக வாழ பரம்பொருளாக எங்கும் நிறைந்து விளங்கும் துஷ்ட நிக்ர சிஷ்டபரிபாலரான ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளை பிரார்த்தித்து எமது நல்லாசிகளை தெரிவிக்கின்றோம்.

சுபமஸ்து

*ஸ்ரீவத்ஸ.வ.இராஜேஸ்வரக்குருக்கள், பிரதமகுரு*
*ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்*
*தேவஸ்தானம். வண்ணை*

## பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசிச் செய்தி

"வேண்டுதல் வேண்டாமை உடையவன் நினைப்பதற்கு அரியவன் நிலத்திலும் வானிலும் உருவாய் அருவாய் உள்ளவன் புலப்படும் பொருளில் எல்லாம் பொலியினும் புரையற்றவன் எம் கடவுள் எனும் நம்மாழ்வார் கூற்றுக்கிணங்க பரந்து வியாபித்துள்ள பரம் பொருள் அடியார்கள் உய்யும் பொருட்டு அவதாரம் செய்தும் உருவெடுத்தும் அருள் புரிகின்றான் இதையே, அவரவர் தமது அறிவுரை அறி வகை வகை அவரவர் இறையவர் என அடி அடையவர்கள் என- பற்பல மக்கள் தத்தம் குணம் அறிவிற்கேற்பத் தாம்தாம் அறிந்த நெறிகளில் தத்தம் கடவுளை வழிபடுவர் என நம்மாழ்வார் மீண்டும் வலியுறுத்தி கூறுகின்றார் இவ் வகையில் இறைவனுக்கு கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்யும் மரபு தொன்று தொட்டு நடை பெறும் பெரும்கைங்கரியமாகும். யாழப்பாணம் வண்ணை வேங்கடேசவரத ராஜப் பெருமாள் ஆலையத திலும் மகா கும்பாபிசேகம் நிகழத் திருவருள் கூடியுள்ளது.

உன்னருளுக்கினிதான நிலையுகந்தேன்
உன்சரணே சரணென்னும் துணிவு பூண்டேன்

எனும் பாசுரத்திற்கமைய - ஸ்ரீதேவி பூமிதேவி சமேத வேங்கடேச வரதராஜப் பெருமாளின் பாதார விந்தங்களை மனத்திலிருத்தி - கும்பாபிஷேகம் சிறப்புறவும் அனைத்து ஜீவராசிகளும் நல் வாழ்வு பெறவும் நாட்டில் அமைதி நிலவவும் ஆசி கூறுகின்றேன்.

"ஸர்வத்ர கோவிந்த நாம சங்கீரததனம்"

*பிரம்மஸ்ரீ சாமி சுந்தரேசக் குருக்கள்,*
*(பிரதிஷ்டா பிரதம குரு)*

## தேவஸ்தானத் தலைவரின் வாழ்த்துரை

இன்று வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதனின் கும்பாபிசேகப் பெருவிழாவாகும். இந்நந்நாளில் பகவானின் திருவருள் வேண்டி இவன் சந்நிதி நாடி குழுமிநிற்கும் சகல அடியவர்கட்கும் நல்லருள் பாலிக்கும் வண்ணம் பிரார்த்திக்கின்றோம். இந்தப் பெருவிழாவில் கர்ப்பக்கிருக மூர்த்தியாகிய ஸ்ரீவேங்கடேசப் பெருமாளுடன் கூடிய ஸ்ரீதேவி பூமாதேவி சமேதரான ஸ்ரீவரதராஜப் பெருமாள் மூர்த்திக்கும் இவரின் பரிவாரமூர்த்திகள் ஆகிய ஸ்ரீரங்கநாதசுவாமி, ஸ்ரீமகாலட்சுமி, ஸ்ரீஆண்டாள் தேவி, ஸ்ரீசந்தானகோபாலசுவாமி, ஸ்ரீவேணுகோபாலசுவாமி, ஸ்ரீசீதாதேவி சமேத ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி, நவக்கிரக மூர்த்திகள், ஸ்ரீகருடன், ஸ்ரீஆஞ்சநேயர் முதலிய மூர்த்திகட்கும் இவர்களது சந்நிதிகளுக்கும் இராஜகோபுரம், ஸ்ரீரங்கநாதகோபுரங்களுக்கும் ஸ்தூபி அபிஷேகமும் மூர்த்திகட்கு கும்பாபிஷேகமும் நடைபெறும்சுபவேளையிதுவாகும். நிறைவான சமாதான சகவாழ்வு மலர என்றும் அவன்தாள் பணிவோமாக.

வாழ்க ஓம் நமோ நாராயணா என்னும் நாமம்.

*தலைவர். நா.ஸ்ரீரஞ்சன்*
*வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள்*
*தேவஸ்தானம். யாழ்ப்பாணம்.*


**க.கு கந்தையாபிள்ளை அன் சன்ஸ்**
318, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**கலாலயா பயிற்சியகம்**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

லேசர் பிறின்டிங், ரைப்பிங், றோணியோ மற்றும் கொம்பியூட்டர் ரைப் செற்றிங் சேவைகளுக்கு
**காந்தன் கொமினிக்கேசன் அன் கொம்பியூட்டர் சிஸ்ரம்**
பலாலி வீதி,
திருநெல்வேலி.

**குகன் ஸ்ரோர்ஸ்**
180(380) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 - 222 2767

**சுப்பலோ**
வீடியோ ஸ்ருடியோ அன் கலர் லாப்
149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 222 2082
198, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 222 2435

**வெங்கடேஸ்வரா**
125A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-222 2905

**லக்ஸி மரக்காலை**
மணிக்கூட்டு வீதி.
பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**வரைவமைப்பு**
கு.கிரிதரன்

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூ

## சிவநெறித் திருமகன்

# ஆறு திருமுருகன் அவர்களின் கௌர

## நல்லை ஆதீனமுதல்வரின் ஆசிச்செய்தி



அன்புடை நெஞ்சத்தீர்!

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி சிவநெறித் திருமகன் செஞ்சொற் செல்வர் என்றெல்லாம் புகழப்படுகின்ற எங்கள் ஆறு திருமுருகன் என்கின்ற சான்றோன் இன்று "சைவநெறி காத்த மகன்" என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுகின்றார்.

ஆசிரியப்பணியோடு சமூகப் பணியையும், ஆன்மீகப் பணியையும் தன் வாழ்வின் இலட்சியமாக வரித்துக்கொண்ட இந்தத் தமிழ் மகனுக்கு இன்று இடம்பெறுகின்ற கௌரவிப்பு சாலவும் பொருத்தமானதே.

சைவமணம் கமழும் இணுவிலம்பதியில் பிறந்து உலகத்து மாந்தர் எல்லோர்க்கும் உதாரண புருஷராய்த் திகழும் ஆறு திருமுருகன் அவர்கள், நாடு எனக்கு என்ன செய்தது என்று எண்ணாது நாட்டிற்கு நான் என்ன செய்தேன் என்று எண்ணுகின்ற நற்குணம் படைத்தோன்.

இந்தவகையில், இன்றைய கௌரவிப்பு விழா சிறப்புற எல்லாம்வல்ல இறைவனை வேண்டி என் ஆசிகளை வழங்குகின்றேன்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
*நல்லை ஆதீன முதல்வர்.*

## அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா அவர்களின் வாழ்த்துப் பாமாலை



### சிவநெறித்தவமகன்

கலையோங்கு யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி
கனிந்த மூன்றாண்டு நிறைவில்
கருதுபல் கலைக்கழகத் துணைவேந்த ராய்நின்ற
கண்ணிகர் *வித் தியானந்தன்*, பொன்
மலையோங்கு நல்லறிஞன் *சந்திரசேகரம்*, பண்பு
மாமகன்கை *லாசபதி*, தம்
வாக்குமனம் காயத்தால் வான்பூத்த பணிசெய்த
மகான் *துரை ராஜா* என
நிலை யோங்கு பெரியோரை நினைந்துகௌ ரவிப்பதுடன்
நினைவினிய சொல்லின் செல்வன்
நீடுபுகழ் சிவநெறித் தவமகன் - பேரறிஞன்
நிறை*ஆறு திருமுருகனை*
தலையோங்கு பணியினைப் பாராட்டி வாழ்த்திடும்
தகுநிகழ்வும் நிகழ்த்துகின்ற
தமனியக் கல்லூரித் தாயேநீ பல்லாண்டு
தபனென வாழி வாழி

*அருட்கவி*
சீ.விநாசித்தம்பி M.A

## சிவத்தமிழ் அன்னையின் வாழ்த்துச் செய்தி




"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" எஞ்பது புறநானூற்றுப் பாடல் அடியாகும். அமரர் ஆறுமுகம் ஆசிரியர் அவர்கள் தாம் பெற்ற பிள்ளைகள் அனைவரையும் சான்றோர் வரிசையில் முந்தி இருக்கச் செய்துவிட்டார். இவர்களிலே ஒருவரே செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள். சொல்லினாலும், செயலினாலும், மனத்தினாலும் தொண்டு பல செய்து கடமையாற்றும் ஆசிரியர் இவராகும். இவருடைய கற்பித்தல் பணியும், சொற்பொழிவுப் பணியும், சமூகப் பணியும் பலராலும் பாராட்டுதற்குரியது. தமிழ் பேசும் நல்லுலகமெங்கணும் சென்று தன் சொற்பொழிவினால் யாழ். மண்ணுக்குப் பெருமை தேடித் தந்தவர் இவர். ஆங்காங்கு கிடைத்த அன்பளிப்புகளை எல்லாம் இந்த மண்ணின் துயர் தீர்வதற்கு கருமமாற்றும் நிறுவனங்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்து உதவியவர் இவர். இவற்றையெல்லாம் மனதில் கொண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இவரைக் கௌரவிக்க இருப்பது வரவேற்கத் தக்கதாகும். கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் தனது உயர்ந்த உள்ளத்தினால் இத்தகைய பணிகளை அவ்வப்போது ஆற்றி வருகிறார். கல்லூரியின் மூன்றாவது ஆண்டு நிறைவின் நினைவுப் பேருரைகளும் சான்றோர் கௌரவிப்பும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இந்த மண்ணுக்கு நல்லன செய்து, நல்லன பேசி, நல்லவர்களாக நாமும் வாழ்ந்து உயர்வடைவோமாக.

"அன்பே சிவம"

கலாநிதி செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டி
சமாதான நீதிபதி.

*தலைவர் ,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*

## மானுடம் வெல்லும்



*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாக பணி செய்யுமாறே.*



*எத்தனையோ மனிதர்கள் இப் பூவுலகில் பிறக்கின்றனர் அவர்களி எல்லோராலும் தனது சமூகத்திற்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய் சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. சந்தர்ப்பம் கிடைத்தாலும் மன ஒத்துழைப்பதில்லை. கிடைக்கும் சந்தர்ப்பத்தை பொருத்தமாகப் பய படுத்தும் மனிதர்கள் ஒரு சிலரே. அவர்களில் ஒருவராக இன்று எம் மத்தியி பிரகாசித்துக் கொண்டிருப்பவர்தான் எமது மதிப்பிற்குரிய செஞ்சொ செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள். நாற்பத்தியிரண்டே வயது நிரம்பி அவர் ஆன்மீகத்துறையிலும், சமூகப் பணிகளிலும், கல்வித்துறையிலும், தம வாழ்நாட் பணியினை தொடர்ந்த வண்ணம் உள்ளார்.*

*திரு. ஆறு திருமுருகன் அவர்கள் 1961-ம் ஆண்டு மதிப்பிற்குரிய உபாத்தியாயர் ஆறுமுக ஆசிரியை சரஸ்வதி தம்பதிகளது புதல்வராக கோப்பாயில் பிறந்தார். அவர் தனது ஆரம்ப கல்வியை யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையிலு பெற்றுக் கொண்டார். இடை நிலைக் கல்வியினை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பெற் பேராதனைப் பல்கலைக் கழகப் பட்டதாரியாக உயர்வடைந்ததோடு பட்டப்பின் கல்வி டிப்ளோம பட்டத்தினை மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் பெற்றுக் கொண்டார்.*

*இந்த நாட்டிற்கு பொறியியலாளர்களையும், வைத்தியர்களையும், பட்டதாரிகளையும் அளித் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஊடகத்துறையினரை, எழுத்தாளர்களை, கவிஞர்களை, நல் பேச்சாளர்களை எமது மண்ணுக்கு அளிக்கவும் தவறவில்லை. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியி பெரிய தூண்களைக் கொண்ட பிரார்த்தனை மண்டபம் பல பேச்சாளர்களை உருவாக்கியுள்ளன நாம் எல்லோரும் அறிந்ததே. இந்தப் பாசறையில் இருந்து பயின்று வெளிவந்து இன்று உலகறிந் பேச்சாளராகத் திகழ்பவர் ஆறு. திருமுருகன் அவர்களாகும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியி கல்வி கற்கின்ற காலத்திலேயே கல்லூரியில் நடைபெற்ற பல பேச்சுப் போட்டிகளில் கலந்து பரிசி களை. வென்றுள்ளார். அத்துடன் அக்காலத்தில் நடைபெற்ற பிரமாண்டமான சேக்கிழார் வி விழாவில் மாணவப்பேச்சாளனாகக் கலந்து எல்லோரது பாராட்டையும் பெற்றுக் கொண்டார். அ இலங்கைக் கம்பன் கழக உறுப்பினராகவிருந்து கம்பன் கழக விழாக்களில் தனது பேச் திறமையினை வெளிப்படுத்தியுள்ளார். அது மாத்திரமல்லாமல் அவரது பேச்சுத்திறமை உலகின் பாகங்களிலும் ஒலித்துள்ளது. இலண்டன், கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா, சிங்கப்பூர் என்ற நாடுகளிலும் சமயச் சொற்பொழிவுகள் இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றியவண்ணமுள்ளா*

*இவரது சொற்பொழிவுகள் பல வீடியோ நாடாவாகப் பதிவு செய்யப்பட்டு வெளியிடப் டுள்ளன. மேலும் இவரது சொற்பொழிவுகளை ARUTHIRUMURUGAN.com என்ற இணையத்த பார்த்தும் கேட்டும் பயன்பெறக்கூடிய வகையில் இலண்டன் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள*

*தற்போது அவுஸ்திரேலியாவில் அன்னை பவானி என்பவரால் ஆறு திருமுருகன் அவர்களி சொற்பொழிவுகள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு "Aruthirumurugan Spritual Le tures" என்ற நூல் வடிவாக்கப்பட்டுள்ள செய்தியும் அவரின் சொற்பொழிவாற்றலுக்கு நல் எடுத்துக்காட்டாகும்.*

*இவரது சொற்பொழிவாற்றலுக்குப் பரிசாக 20க்கும் மேற்பட்ட தங்கப் பதக்கங்கள், தங் சங்கிலிகள், கணையாளிகள் அன்பர்களால் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளன. செஞ்சொற்செல் என்ற பட்டத்தைத் தவிர இதுவரை 25க்கும் மேற்பட்ட பட்டங்கள் உலகின் பல பாகங்களில் இருந் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன.*

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனது சொ பொழிவுகளுக்காகவோ அல்லது இலக்கியப் பேச்சுக்களுக்காகவோ மட்டும் அவரைக் கௌரவி வேண்டுமென்று முன்வரவில்லை.*

*அவரது பேச்சுத் தனித்துவமானது, இனிமையானது, நாகரிகமானது. இதில் இரண்டு கருத்து*

**யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் கல்விச்சேவைக்கும், ஆறு திருமுருகன் அவ**

AMT TRANSPORT SERVICE
71, SHOE ROAD, COLOMBO - 13
கிளை ஸ்தாபனம்:-
AMT ரான்ஸ்போட்
இருபாலைச்சந்தி,
கோப்பாய்.

பிரகாஷ் ரான்ஸ்போட் சேவிஸ்
இல. 221, டாம் வீதி,
கொழும்பு. 12
பிரகாஷ் ஏஜென்சி
இல. 457, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம்
புத்தகசாலை
SEA STREET, COLOMBO.
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

E:R: ரான்ஸ்போட் சேவிஸ்
சென்றல் றோட்,
172/1, கொழும்பு-12

# …ல்லூரி மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வு

## …ன் செஞ்சொற் செல்வர்

## …ரவிப்பு சிறப்புமலர் - 10.07.2003

### …ம் மாண்புமிகு மனிதர்

இடமில்லை. உலகத் தமிழர் அனைவருமே அவரது பேச்சுக்காக பல்வேறு நாடுகளுக்கும் அழைக்கின்றனர். கௌரவிக்கின்றனர். இன்புறுகின்றனர்.

நாம் அவரை கௌரவித்துப் பெருமைகொள்ள நினைத்தமைக்கு இதற்கு மேலும் பல விஷேட தன்மைகள் அவரிடம் காணப்பட்டமையே காரணமாகும். அவற்றுள் சிறப்பாக இங்கு சுட்டிக் காட்ட வேண்டியது குறிப்பாக அவரிடத்து பரவிக்காணப்படுகின்ற மானுடத்தை மதிக்கும் மகாகுணம். இது அவரிடத்து மாத்திரமல்ல அவரது குடும்பத்தினர்களிடமும் காணப்படும் இயல்பு. மனிதத்துவம் என்பது அவர்களின் மகாசொத்து. மற்றவர்களை மதித்தல் விருந்தோம்பல், உதவுதல் போன்றனவெல்லாம் அவர்களின் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்தவை. இவற்றை வளர்க்கும் நோக்குடனேயே அவர்கள் குடும்பத் தலைவர் அமரர் ஆறுமுகம் உபாத்தியாயர் அவர்கள் வாழ்ந்து காட்டி பயிற்சியளித்து வழிகாட்டியுள்ளார். அவரின் வழிகாட்டலில் வளர்ந்த செஞ்சொற் செல்வர் அவர்கள் பல அரிய சமூகப் பணிகளை ஆற்றுதல்தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார். அவரிடமிருந்து எம்மைக் கவர்ந்த விடயங்களில் இது முதன்மையானது.

பணம், பணம், பணம், என்று அலையும் இன்றைய உலகில், தனது உயர் பேச்சால் தனது தன்னலமற்ற உழைப்பால், தனது நேர்மையான செல்வாக்கால் கிடைக்கும் முழு வருமானத்தையும் அறப்பணிகள் பொதுப் பணிகள் ஆற்றும் ஒரு மனிதரைக் காணவேண்டுமென்றால், நாம் துணிந்து செஞ்சொற் செல்வரைக் காண்பிக்க முடியும், காண்பித்துப் பெருமை கொள்ளவும் முடியும். இலங்கையில் மாத்திரமல்ல உலகின் எப்பாகத்துக்குச் சென்றாலும், எக்காரியத்தைச் செய்தாலும் எவரைச் சந்தித்தாலும் அவர் ஒரே கருத்தையே கொண்டிருப்பார். எவ்வாறு அவற்றின் மூலம் அல்லது அவர்கள் மூலம் எமது சமூகத்துக்குதவலாம் என்பதே அதுவாகும்.

இவ்வளவு தூரம் சமூகத்தை நேசிக்கும், சமூகப்பணியாற்றும் மனிதரை நாம் காண்பதரிது. அவர் கொண்டுள்ள சமூகப்பற்றில் ஒரு துளியையாவுதல் நாம் கொள்வோமேயானால், எமது சமூகத்தின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அது பேருதவியாக அமையும் என்பது திண்ணம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அவரைக் கௌரவித்துப் பெருமை கொள்ள முயற்சி எடுத்தமைக்கு வேறு ஒரு காரணமும் உண்டு. அக்காரணம் கௌரவித்தலுக்கான உரிமையையும் வழங்கிற்று. இன்று எமது மண்ணுக்கு வேண்டிய நல்லாசிரியர்களை உருவாக்குவதற்கு பல்வேறு இடர்பாடுகள் மத்தியிலும் அரும்பாடுபட்டுக் கொண்டிருப்பது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி என்றால் அது மிகைபடும் கூற்று அல்ல. மாணவர்களின் உழைப்பு, விரிவுரையாளர்களின் அர்ப்பணிப்பு சமூகத்தின் அரவணைப்பு ஆகியனவெல்லாம் எமது கல்லூரியின் நல்லாசிரியர்கள் உருவாக்கத்துக்கு உற்றதுணையாகி உதவிவருகின்றன.

இவ்வாறாக நல்லாசிரியர்களை உருவாக்க உழைக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நல்லாசிரியர் விருது பெற்ற ஒருவரையே கௌரவிக்க ஏற்பாடு செய்து கொண்டமை உரிமையுணர்வால் என்பதைக் கண்டு கொள்ள வேண்டும்.

ஒரு தடவையல்ல இரண்டு தடவைகள் செஞ்சொற் செல்வருக்கு நல்லாசிரியர் விருது கிடைத்துள்ளது. 1991 இல் யாழ். கல்வித் திணைக்களம் இவருக்கு நல்லாசிரியர் விருது வழங்கிக் கௌரவித்தது. இவர் கற்பிக்க ஆரம்பித்தது 1989 இல் ஆகும். கற்பிக்க ஆரம்பித்து முதல் மூன்று வருடத்திற்குள்ளேயே நல்லாசிரியர் விருதைப் பெற்றுக் கொண்டமை அவரின் கற்பித்தல் சிறப்புக்குக் கிடைத்த பரிசு என்றே கூறவேண்டும். அதைத் தொடர்ந்து 2002-ம் ஆண்டு மீண்டும் அவருக்கு நல்லாசிரியர் விருதினை வலிகாமம் கல்வி வலயம் வழங்கிக் கௌரவித்தது. இத்தகைய சிறப்பு ஒருவருக்கு இருதடவைகள் கிடைப்பது என்பது மிகப் பெரிய பேறாகும். செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனுக்கு இது இரண்டு தடவைகள் கிடைத்துள்ளதென்றால், உண்மையில் அவரின் ஆசிரிய சேவையின் சிறப்பினாலென்றே தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. அப்படியான ஒருவரைக் கௌரவிக்க யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு முழு உரிமையும் கடமையும் உண்டு.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் மாத்திரமல்ல அவரது குடும்பமே ஆசிரியப்பணிக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் தான். அண்மையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகை தந்த பிரதம ஆணையாளர் திருவாளர் ஏ.சி.எம். இப்றாகிம் அவர்கள், யாழ்ப்பாணத்தில் தனக்குக் கற்பித்த ஆசிரியர் ஒருவர் இருக்கின்றார் அவர் எங்கிருக்கின்றாரோ தெரியாது என்று பலரிடம் கேட்டுத் தேடித்திருந்து இறுதியில் கண்டு பிடித்துக் கொண்டார். அவர் வேறு யாருமல்ல செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களின் தந்தையார் ஆறுமுகம் உபாத்தியாயர் தான். அவர் உடனே தன்னை ஆறுமுகம் உபாத்தியாயரிடம் அழைத்துச் செல்லும்படி என்னிடம் கேட்டுக் கொண்டார். நானும் அவ்வாறே செய்தேன். அவர் உபாத்தியாயரைக் கண்டதும் ஓடிச் சென்று ஆரத்தழுவி கண்ணீர் மல்க "சேர் உங்களால் தானே நான் இந் நிலையில் இருக்கிறேன்," என்று நாத் தழுதழுக்கக் கூறிய காட்சி இன்றும் என் மனத்திரையில் ஓடிக் கொண்டே உள்ளது. இவ்வாறு ஆசிரியப் பணியில் உயர் பெறுமானம் உடைய பணிகளையாற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கின்ற பல அங்கத்தவர்களைக் கொண்டது செஞ்சொற் செல்வர் குடும்பம். இன்று அவருக்கு அளிக்கப்படுகின்ற கௌரவம் அவருக்கு மாத்திரமல்லாது அவர் குடும்பத்தினருக்கும் கௌரவத்தைத் தருவதோடு அமையாது அண்மையில் அமரத்துவம் அடைந்த அவரது தந்தையார் ஆறுமுகம் உபாத்தியாயரது ஆன்மாவுக்கும் சாந்தி தருவதாக அமைய எல்லாம் வல்ல நல்லூர் முருகப் பெருமான் அருள்பாலிப்பாராக.

பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

### சிவநெறித் தவமகன் செஞ்சொற் செல்வர்
### ஆறு திருமுருகன்
## வாழ்வும் பணியும்

| | |
|---|---|
| முழுப்பெயர்: | ஆறுமுகம் திருமுருகன் |
| தந்தை : | கந்தையா ஆறுமுகம் |
| தாய்: | ஆறுமுகம் சரஸ்வதி |
| பிறந்த திகதி: | 28.05.1961 |
| இடம்: | கோப்பாய் |
| கல்வி: | -ஆரம்பக்கல்வி: யா/இராமநாதன் கல்லூரி |
| | -யா/இந்து ஆரம்ப பாடசாலை |
| | -இடைநிலைக்கல்வி: யா/யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி |
| | -உயர் கல்வி: பேராதனைப் பல்கலைக்கழகம் |
| | - பட்டப்பின் கல்வி : தேசிய கல்வி நிறுவகம் |
| தொழில்: | ஆசிரியர் - 1989இலிருந்து |
| நல்லாசிரியர் விருது: | (1) 1991இல் யாழ்.கல்வித்திணைக்களம் வழங்கியது |
| | (2) 2002இல் வலிகாமம் வலயம் வழங்கியது |
| பணிபுரியும் பாடசாலை: | யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரி, சுன்னாகம், யாழ்ப்பாணம். |

**வகிக்கும் பதவிகள்:**

1. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினர்.
2. திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச்சங்கம் - பணிப்பாளர்.
3. அருள்ஒளி ஆன்மீகச் சஞ்சிகை - பிரதம ஆசிரியர்.
4. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆலோசனை சபை உறுப்பினர்.

**சொற்பொழிவுகளும் பிறவும்:**

1. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பல்வேறு பேச்சுக்கள்
2. சேக்கிழார் விழாவில் பேச்சு
3. 1990இல் இருந்து அகில இலங்கை கம்பன் கழக மேடைகளில் பங்கு கொண்டமை
4. 1999இல் - இங்கிலாந்தில் அகில உலக இந்துமாநாட்டில் பேச்சு
5. 2000 இல் இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினர் நடாத்திய முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டமை.
6. 2000 இல் கனடாவில் - தமிழர் தகவல் மையம் நடாத்திய விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேச்சு.
7. 2001 இல் இலண்டன் சிவயோகம் அறக்கட்டளையினர் நடாத்திய விழாவில் பேச்சு.
8. 2001 இல் அவுஸ்திரேலியா, சிட்னி சைவமன்றத்தினரின் விசேட அழைப்பை ஏற்று - 50க்கு மேற்பட்ட சொற்பொழிவுகள்.
9. 2001 இல் சிங்கப்பூர் தமிழ் ஆசிரியர் மகாநாட்டில் "இலங்கையில் தமிழ் இலக்கிய கற்பித்தலில் ஏற்படும் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வாசித்தமை.
10. அதே ஆண்டில், இந்தியாவில் பேரூர் ஆதீன அழைப்பில் அங்கு சொற்பொழிவு.
11. 2002இல் மீண்டும் இலண்டன் சிவயோகம் அறக்கட்டளை விழாவில் சொற்பொழிவு.
12. அதே ஆண்டு இலண்டனில் ஈலிங் என்ற இடத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் கலந்து சொற்பொழிவு.
13. 2003 இல் சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம் அழைப்பில் அங்குள்ள செம்பக விநாயகர் ஆலயத்தில் 10 நாட்கள் தொடர் சொற்பொழிவு.
14. 2003 இல் அவுஸ்திரேலியா சிட்னி முருகன் கோவிலில் அவுஸ்திரேலியா, ஈழத்தமிழர் கழக அழைப்பில் சிறப்புரை.
15. இலங்கையில் பல்வேறு காலப்பகுதிகளில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, மலையகம் ஆகிய இடங்களில் சொற்பொழிவுகள்.

**…அவர்களின் அரும் பணிக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

அர்ச்சிகை களஞ்சியம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

S.S.ENTERPRISES
Transporters and General Merchants
63, Grand Bazar, Jaffna.
220, Keyzer street, Colombo - 11
Phone: 336186, 433679
Fax: 445559

RTK HARDWARE STORES
WHOLESALE & RETAIL DEALERS
CEMENT LIME, ASBESTOS STEEL & BUILDING MATERIALS
57, Manning, Place, Wellawatta, Colombo-06
Tel: 595072

இரத்தின கோபால்ஸ்
63,65,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

# சைவ பரிபாலன சபை அகில இலங்கை ரீதியில் நடத்திய சைவநெறித் தேர்வில் பதக்கம் பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவ பரிபாலன சபையால் அகில இலங்கை ரீதியில் கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சைவநெறித் தேர்வில் சித்தியடைந்தோரின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் பரிசாக வழங்கப் படவுள்ளன. இப்பரிசு வழங்கும் வைபவம் எதிர்வரும் 13 ஆம் திகதி நீராவியடி நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் முறையே,

**தரம் - 2**

பி.குணவரன் - புனித ஜோன் பொஸ்கோ வித்தி., வ.தனுஜன் - இணுவில் மத்திய கல்லூரி, ப.சந்துஜா - நயினாதீவு ஸ்ரீநாகபூசணி வித்தி.

**தரம் - 3**

வ.சந்தனா - இந்து மகளிர் ஆரம்பப் பாட., செ.சேயோன் - பரியோவான் கல்லூரி, வி.லதீஷா - துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாட.

**தரம் - 4**

த.கவிராஜ் - விக்னேஸ்வராக் கல்லூரி, நா.விதுஷன் - இந்து ஆரம்பப் பாட., த.தர்சன் - வவு.சைவப் பிரகாச மகளிர் கல்லூரி.

**தரம் - 5**

சி.சகிஷ்னா - வதிரி திரு இருதயக் கல்லூரி, அ.சங்கீதா - மகாஜனக் கல்லூரி, ஏ.மயூரணன் - விடத்தற்பளை கமலாசினி வித்தி.

**தரம் - 6**

சி.வைணவி - வேம்படி மகளிர் உயர்தர பாட., சி.மாதுமை - ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பி.யாசினி - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட.

**தரம் - 7**

கு.விவாகரன் - யாழ். இந்துக் கல்லூரி, ப.மதுவந்தி - மீசாலை வீரசிங்கம் மகாவித்தி, ம.மயூரி - யாழ்ப்பாணக் கல்லூரி.

**தரம் - 8**

ச.ரகுராஜ் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, த.அனுஷியா - கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தி., வி.அனுத்ரிகா - கொக்குவில் இந்துக் கல்லூரி.

**தரம் - 9**

செ.ரெனீசியா - இந்து மகளிர் கல்லூரி, இ.ராதிகா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி., மா.அருளினி - கிளி.உருத்திரபுரம் மகா வித்தி.

**தரம் - 10**

க.பிரதீபன் ஹாட்லிக் கல்லூரி, சோ.மகிந்தினி - கிளி.பூநகரி மகா வித்தி., சி.காயத்திரி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**தரம் - 11**

கு.கஜந்தா - உடுவில் மகளிர் கல்லூரி, த.நிலானி - விக்ரோறியாக் கல்லூரி, சி.ராதிகா - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**தரம் - 12**
**(இந்து நாகரீகம்)**

பா.வேணுகாராணி - நயினாதீவு மகா வித்தி., க.விஜயகலா - கிளி. பளை மத்திய கல்லூரி, தி.சங்கீதா - பெரியபுலம் மகா வித்தி.

**தரம் - 12**
**(இந்து சமயம்)**

க.கல்ப்பனா - கிளி.முருகானந்த மகா வித்தி., க.யோகசெளரி - சாவகச்சேரி மகளிர் கல்லூரி. ப. உதயசாந்தினி - உசன் இராமநாதன் மகா வித்தி.

**தரம் - 13**
**(இந்து நாகரீகம்)**

வ.யசோதா - நெல்லியடி மகா வித்தி., கோ.சுதர்சினி - நெடுந்தீவு மகா வித்தி., கு.நேமினி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**தரம் - 13**
**(இந்து சமயம்)**

ச.விஜயகுமார் - கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி., க.துஷ்யந்தன் - கிளி.முருகானந்த மகா வித்தி., க.சிறிவரன் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

(உ-15)

# மரண தண்டனைக் கைதிகள் இருவர் மேன்முறையீடு

(கொழும்பு)

பந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் இருவரும் இத்தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் கடந்த திங்களன்று மேன்முறையீடு செய்துள்ளார்கள்.

குற்றவாளிகளான எஸ்.ஜே.கருணாசேன, சப் இன்ஸ்பெக்டர் ரி.ஆர். ரத்தினநாயக்கா ஆகியோரே மேன்முறையீடு செய்தவர்களாவர்.

தாஙகள் குற்றவாளிகள் இல்லை எனவும் தங்களது மரணதண்டனையை இரத்துச்செய்யக் கோரும் உத்தரவு பிறப்பிக்கும் படியும் மேன்முறையீட்டு மனுவில் அவர்கள் கோரியுள்ளனர்.

(பி-3)

# பா.உ.க்கள் முரண்பாடு
# பாராளுமன்ற அமர்வு ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றப் பாதுகாப்பு விவகாரம் குறித்து ஆளுங்கட்சி எதிர்க் கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட வாய்த் தகராறு காரணமாக பாராளுமன்ற அமர்வுகள் அரைமணிநேரம் ஒத்தி வைக்கப்பட்டது.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் கூடியபோது சபாநாயகர் ஜோசப் மைக்கேல் பெரேரா அதன் பாதுகாப்புக் குறித்து விசேட அறிக்கை ஒன்றினை வாசித்தார்.

பாராளுமன்றத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளினைப் பேணுவதற்கு 6உறுப்பினர்கள் தமது பாராளுமன்ற பிரத்தியேக பெட்டகங்களைத் திறப்பதற்கு அனுமதியளிக்கவில்லை எனவும் சபாநாயகர் அங்கு தெரிவித்துள்ளார்.

அப்போது அங்கு எழுந்து நின்ற பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், ஒத்துழைப்பு வழங்காத பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தினார்.

ஆளுங்கட்சியின் பிரதான ஒருங்கிணைப்பாளர் மகிந்த சமரசிங்க, சபை அமர்வுகளை தற்காலிகமாக இடைநிறுத்தி, பாதுகாப்புப் பெட்டகங்களை சோதனை இடுமாறு ஆலோசனை வழங்கினார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இதனை ஆமோதித்த போதும் பெட்டகங்களைச் சோதனையிடுவதற்கான காலத்தில் எதிர்க் கட்சியினர் விவாதத்துக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை மட்டுப்படுத்தக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக இரு கட்சியினரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதனால் பாராளுமன்ற நடவடிக்கைகள் அரைமணிநேரம் ஒத்திவைக்கப்பட்டன.

(தி)

# நிரந்தர நியமனத்தை எதிர்பார்த்து முன்பள்ளி ஆசிரியைகள் ஏமாற்றம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக குடாநாட்டில் முன் முன்பள்ளித் திட்டத்தில் சேவையாற்றி வருகின்ற 700 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியைகள் நிரந்தர வருமானம் அற்ற நிலையில் தமது வாழ்க்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

இத்தகைய ஆசிரியர்களின் நிலைகளை தொழில் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பலப்படுத்த பல நிறுவனங்களும், சில திணைக்களங்களும் ஆரம்பக்கட்ட முயற்சிகளையும் செயற்பாடுகளையும் கடந்த காலங்களில் முன்னெடுத்திருந்த போதிலும் எந்தவித சாதகமான முடிவுகளும் இதுவரை காணப்படவில்லை.

இதன் காரணமாக தமது பதவிகள் நிரந்தரமாகுமென நம்பியிருந்த 700 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களும் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேசமயம், குடாநாட்டில் முன்பள்ளித் திட்டங்களை திட்டமிட்ட முறையில் நடாத்திவந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் தம்மிடம் குறித்த செயற்திட்டத்துக்கான நிதியின்மை காரணமாக அவற்றுக்கு வழங்கி வந்த அனுசரணையையும் ஆதரவினையும் நிறுத்தியிருப்பது தெரியவந்துள்ளது.

(உ-77)

# ஐ.தே.க. வின் ஒழுக்காற்று அறிக்கை கையளிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்களுக்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்த அறிக்கை ஒன்று கட்சியின் சிரேஷ்ட நிறைவேற்றுக் குழுவிடம் கடந்த திங்களன்று கையளிக்கப்பட்டது.

கட்சியின் உபதலைவரும், அமைச்சருமான கரு ஜெயசூரியவினால் தயாரிக்கப்பட்ட இவ்வறிக்கையில்,

முக்கியமான ஒழுக்காற்றுப் பிரேரணைகள், அவற்றை கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் உள்ளூராட்சி சபை அங்கத்தவர்கள் பின்பற்றவேண்டியதன் அவசியம், கட்சியின் சட்டப்பிரமாணங்களை மீறியுள்ள அங்கத்தவர்கள் மீது மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை, அவர்களை இடைநிறுத்துவதற்கான உத்தேச தீர்மானம் என்பன பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கொலை மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட்ட கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் மூவரை கட்சியில் இருந்து நீக்கப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(தி)

## வாக்காளர் இடாப்புப் பிரதிகள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 2003 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பில் திருத்தம் ஆரம்பமாகியுள்ளதால் வாக்காளர் இடாப்பின பிரதிகளை எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை அலுவலக நேரத்தில் வந்து திட்டமிடற் பிரிவில் பார்வையிடலாம் என பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் அறிவித்துள்ளார்.

(உ)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

செல்லக்கதிர்காம ஆலய மஹோற்சவ கால ஆன்மீகத் தொடர் சொற்பொழிவில் இன்று வியாழக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் கந்த. சத்தியதாசன் ''காவிக்கமலக் கழலுடன் சேர்த்தருள்வாய்'' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

(உ-8)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## இன்று பன்னிரண்டாம் திருவிழா



# நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### நாம் வாழ வாழ்த்துவையே

ஊட்டும் உன்கருணைத் திருவருளால்
உன்பாதமே சேவிப்போர்
தேட்டம் பெரிதாய்த் தெரிவித்தாய்
தேயமெல்லாம் நயினையில்
கூட்டும் நாகம்மையே! தமிழர்குலக்
கொழுந்தே! எம்குறைதீர்த்து
நாட்டின் நிலைமையினைச் சீர்செய்து
நாம் வாழ வாழ்த்துவையே!

செ.செல்வதாப (கண்ணா)

### பகலிரவு தொழு தோம்

| | | | |
|---|---|---|---|
| நயினை | உறையும் | நலன்தரு | நாயகி |
| உந்தனிடம் | நலம்நாடி | ஓடோடி | வந்தோம் |
| பயிலும் | மக்களது | பாரமதை | குறைக்க |
| பகலிரவு | உன்பாதம் | மலரினால் | தொழுதோம் |

இ.பிரதாயினி நல்லூர்.

### பக்திச்சரம் சுற்றித்தருமொரு வரந்தாராய்

| | | |
|---|---|---|
| முத்தைத்தரு | சிப்பிப் | படைபல |
| வைத்திட்டிரு | சப்தக் | கடலலை |
| முத்தத்தொடு | பத்மப் | பதமதை - நீராட்ட |
| முத்திப்பதம் | கிட்டத் | தடைதரப் |
| பற்றித்தொடர் | கெட்டப் | பவவினை |
| அற்றிற்றுனைப் | பற்றிற் | றிடவருள் - புரியாதே |
| பக்திக்கெடு | வுற்றுப் | பலபல |
| சக்திப்பெயர் | வைத்துத் | தொழுதெழ |
| பட்சத்தொடு | ரட்சித் | தருளருள் - நாகம்மா |
| பச்சைப்பசும் | பொட்டிட் | டழகுறு |
| ரத்நச்செழுஞ் | சுட்டிப் | பணியணி |
| பட்டிட்டொளிர் | சக்ரத் | திடையமர்ந் - தெழிலாக |
| பித்துக்கொடு | பற்றிப் | பதமதை |
| நித்தந்தொழும் | பக்தர்க் | குனதருள் |
| சித்தித்திடு | சித்தத் | தொடுவலம் - வருதாயே |
| பிச்சிச்சரம் | வைத்துப் | பணிபவர் |
| சித்தந்தனை | யிச்சித் | தவரடை |
| துக்கம்நனி | வற்றிற் | றிடவருள் - புரியாயோ |
| மெத்தப்பெற | விக்குள் | விழுவதை |
| விட்டிட்டுனைப் | பற்றித் | தமிழினில் |
| பக்திச்சரம் | சுற்றித் | தருமொரு - வரந்தாராய் |
| மெச்சத்தரு | நச்சுப் | படவர |
| வுற்றிற்றிரு | சக்தித் | தலமென |
| மிக்கப்புகழ் | நத்தும் | நயினையம் - பதியாளே |

நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்

### நல்வரங்கள்

நாம பஜனை செய்து வழிபட
நயினை நாகபூசணி
தாமதங்கள் தடைகள் அறுப்பாள்
நல்வரங்களளிப்பாள் - தீமைதரு
பாவக்கிரகங்களின் பார்வையைக்
கெடுப்பாள் - அடியவர்
நாகதோச நிவர்தினியாம்
நயினையுறை நாயகியே!

ஜெயகேமலதா தொட்டிலடி

## ஆலய மண்டபத்தில் இன்று ஆன்மீக சொற்பொழிவு

திருமதி நாச்சியார் செல்வநாயகம்

*(தலைவர், இந்து நாகரிகத் துறை யாழ். பல்கலைக்கழகம்.)*

# தமிழை வழிபட்ட தகைசார்ந்த தங்கப்புலவர் நவாலியூர் சோமசுந்தரர்

## இன்று 50வது நினைவு தினம்



### தமிழை வழிபட்ட தகை சான்ற புலவர்

தமிழைப் பாடாத புலவன் தமிழகத்தில் தோன்றவில்லை. அந்தப் பெரும்புலவர் வழிவந்த ஈழத்தின் இணையற்ற புலவர் தம் மதியழகனார் (சோமசுந்தரனார்). நம் தமிழைத் தாயாக, குழந்தையாக, செல்வியாக செம்மைமிகு தெய்வமாக, நலமிக நாமகளாகப் பல இடங்களில் வாழ்த்தி வாழ்த்துகிறார். செந்தமிழ் மக்களைப் பார்த்து எம் தெய்வத் தமிழ் மொழியின் சீரினைத் தேரீர் என்றும், எம் தமிழ் மாதாபடும் அல்லலைத் தீர்க்கும்படியும் கூறும் அவர்: முச்சங்கத் தரியணையேறி - மன்னர் முடி தொட்ட மூவரும் அடிதொட்டு போற்ற பெரும் புகழோடு வாழ்ந்தவன் என்பதையும் நினைவு படுத்துகிறார். எம்மை வாழ்விக்கும் தமிழ்மொழியை மறந்து யாம் வேற்று மொழிகளைக் கற்று, எம் மெய்யான முது சொத்தை விலைபேசி விற்று விட்டோம் என்று எம்மீது குறை காண்கிறார். அத்தோடு நந்தமிழ் ஓதுதலை விட்டு பண்டைய நடைமுறை, பாவனை, நன்னெறி விட்டு மற்று மயனமொழி தொட்டு உமிழ்த்திக கை சலித்திட்டோம் என்றும் உணவிருக்க விடமுண்டு கெட்டோம் என்றும் எம் இழிநிலைக்காக இரங்குகிறார். இப்படி வீழ்ச்சியுற்ற நாம் எழுச்சியுற வேண்டும்.

''ஐம்புலச் செம்புலம் வேண்டில்
- நேரில்
அருந்தமிழ் மனைவாழ்க்கை அறநெறி
- வேண்டில்
செம்பொருளின்பமும் வேண்டில்
- தெய்வத்
திருவள்ளுவர் மொழ சிந்தைசெய்
- வீரே''

அரசியல் அறிஞராக - முன் கூட்டி உணர்கின்ற மூதறிஞராக - (தீர்க்க தரிசியாக) விளங்கினார். ''தெய்வத் தமிழை சிங்களத்தைத் தேச மொழிகளாக்குவோம'' என்று கூறி இவ்விரு மொழிகளையும் ஈழத்தின் இரு கண்களாகக் காண விரும்பியும் கவிஞர்,

''எம்மில் யாரும் சிறியரல்ல என்று நினைத்து போற்றுவோம'' என்று அறுதியிட்டு உறுதி கூறுகிறார். தன் செவ்வுரையைச் செவிமடுக்க மறுப்போருக்கு ''அஞ்சுவிரலும் சேர்ந்திடில் அரிய கருமம் புரியலாம், கொஞ்சமொன்று நோவுறின் கடுங் கருமமில்லையே'' என எச்சரிகிறார். எனினும் இந்த எச்சரிக்கையை ஏற்று எம் அரசாங்கம் ஏற்றது செய்யுமா என்பது பெரும் கேள்விதான்.

என்று அறிவுரை கூறும் புலவர் மங்கல மறைமொழி ஔவையின் மந்திர வாய்மொழியையும் மனம் கொள்ளுமறு வேண்டுகிறார். அப்பொழுது தான் எம் இனத்தின மானமும், வீரமும் சேரும் செம்மை மாறாத வாழ்க்கையும், ஆண்மையும் சேரும். ஞானமும் வீடும் கைகூடும் என்று உறுதியளிக்கிறார்.

### மொழிக்கு ஒத்த உரிமை வேண்டிய ஒப்பற்ற புலவா

எம்மொழியின் பெருமை பேசிய நம் புலவர் வெறும் மொழிப்புலவராக மட்டும் விளங்கவில்லை. சிறந்த

### மறைந்தார் மாண்பு

### பல்லாயிரம் பாடிய பாவலனுக்குப் பைந்தமிழர் கடன் என்ன?

தங்க மாயமான தோற்றத்தோடு, களங்கமில்லா உள்ளத்தோடு, அகத்தின் அழகு முகத்தில் ஒளிக்க, தங்கத் தகட்டில் வெள்ளிக் கம்பிகளைப் பதித்தாற்போன்ற அவருடைய தாடி மெல்லிய காற்றிற் கசைந்து அழகு கொடுக்க, அதனைத் தன் மென்விரல்களால் தடவிக் கொண்டு தமிழ் கூறும் நல்லுலகிற்கு அவர் அள்ளி அளித்த பாடலகள் ஏறக்குறைய பத்தாயிரம், அத்தோடு உரைநடைக் கட்டுரைகளும் பல, அவற்றை,

☆ சிறுவர் இலக்கியம் ★ தோத்திர இலக்கியம் ★சித்தாந்த இலக்கியம் ★ வரலாற்று இலக்கியம் ★ உரைநடை இக்கியம் என ஐம் பெரும்பிரிவாகப் பிரிக்கலாம். எனினும் இதுவரையில் வெளிவந்த அவரின் பாடல்களோ, நூல்களோ மிகச் சிலவேயாகும். அவர் யாத்த பாடல்கள், கட்டுரைகள் அனைத்தையும் விரைவில் நூல் வடிவில் கொண்டு வருவதேயாம் அவருக்குச் செய்யும் கைம்மாறு : இதுவே அவருக்கு யாம் எழுப்பும் அழியாத நினைவுச் சின்னமும் கூட. நன்றி மறவாத நற்பண்பு தமிழரின் தனிப்பண்பு என்பதை உலகிற்கு எடுத்துரைக்க இது நல்லதோர் வாய்ப்பு. வாய்ப்பினைப் பயன்படுத்தல் வண்டமிழர் கடன்:

**வாழ்க சோமசுந்தரப் புலவர் புகழ்!**

**மா.க. ஈழவேந்தன்**

## பிரதமரிடம் விளக்கம்

(கொழும்பு)

சம்பள உயர்வு தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடுபற்றி விளக்கமளிக்க வேண்டுமென அகில இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் 'கடிதமூலம்' கேட்டுள்ளது.

மேற்படி சங்கத்தினால் பிரதமருக்கு அனுப்பப்பட்ட அக்கடிதத்தில் சம்பள அதிகரிப்புத் தொடர்பாக அரசாங்கம் வெளியிட்டுள்ள கருத்து தெளிவற்றது எனறும் சம்பள அதிகரிப்பு எந்த அடிப்படையில், எப்போது முதல் அமுலுக்கு வருகிறது என்பது பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-10)

## தொடர்பு கொள்க!

(கொழும்பு)

கீழே பெயர் குறிப்பிட்ட நபர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

திருமதி ரேவதி கிருஷ்ணராஜா - 223, 6ம் குறுக்குத்தெரு, மணியம் தோட்டம், கொழும்புத்துறை. திருமதி ஜானகி பிரான்சிஸ் - 15,மத்திய கிழக்கு வீதி, குருநகர். திருமதி அமலராணி குருநாதன் - 64, 1 புகையிரத நிலைய வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம். செல்லையா பிரான்சிஸ் - 219, 6ம் குறுக்குத் தெரு, மணியம்தோட்டம், கொழும்புத்துறை. மலர் பௌலிஸ் - 91, 9, டேவிற் வீதி, குருநகர். திருமதி தியாகராஜா தனலஷ்மி - கல்வளை பிள்ளையார் கோவில் தெற்கு வீதி, சண்டிலிப்பாய். (உ)

## வங்கிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

விசேட பொலிஸ் பாதுகாப்பு செயல் திட்டத்தின் கீழ், இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதி லியனகே தெரிவித்துள்ளார்.

இதற்கமைய காலை 9மணி முதல மாலை 3மணி வரை பாதுகாப்பு கடமையில் ஈடுபடும் பொலிஸார், வங்கிகளை சூழவுள்ள வட்டாரங்களில் விசேட ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளனர். (தி)

# அமெரிக்க வீராங்கனை மாட்டீனா டெனிஸ் வரலாற்றில் புதிய சாதனை

விம்பில்டன் டெனிஸ் வரலாற்றில் 20பட்டங்களை வென்று அமெரிக்காவின் ''மாட்டீனா நவரெட்டினலோவா'' உலக சாதனை ஒன்றை சமப்படுத்தியுள்ளார்.

முன்னர் டெனிஸ் வீரர் ''பிளீ ஜீன்கிங்'' இதற்கு முன்னர் 20பட்டங்களை விம்பில்டன் போட்டியில் வென்ற வீரராவர். இம்முறை விமபில்டன் கலப்பு இரடடையர் போட்டியில் மாட்டீனா இந்தியாவின் லியண்டர் பேஸ் உடன் இணைந்து சம்பியன் பட்டத்தை வென்றதன் மூலமே இச்சாதனையை சமப்படுத்தியுள்ளார்.

இவ் இறுதிப் போட்டியில் இச்ஜோடி இஸ்ரேலிய வீரர் 'அன்ரிரெயின்' மற்றும் ரஷ்யாவின் ''அன்ராசியா ரொடியானா'' ஜோடியை 6:3, 6:3 என்ற நேர் செற்களில் தோற்கடித்து இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளது.

**விளையாட்டு**

மாட்டீனா இதனுடன் சேர்த்து டெனிஸ் வரலாற்றில் 58 கிறான்லாம பட்டங்களும் பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

விம்பில்டன் வரலாற்றிலும் ஒற்றையர் பிரிவில் 9தடைவகள் சம்பிய னாகி ஏற்கனவே சாதனை ஒன்றை ஏற்படுத்தியிருக்கும் இவர், இரட்டையர் போட்டிகளில் 7 தடைவைகளும், கலப்பு இரட்டையர் போட்டி களில் 4தடவையும் விம்பில்டன் சம்பியன் பட்டம் வென்றுள்ளர்-.

அத்துடன், கிறான்லாம் பட்டம் வென்றுள்ள அதிகவயதுடைய வீராங்கனை என்ற சாதனை யையும் மாட்டீனா முறியடித்துள்ளார். இம்முறை கலப்பு இரட்டையர் போட்டியில் மாட்டீனா சம்பியன் ப்ட்டம் பெறும்போது அவருக்கு வயது 46என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## மும்முனை கிரிக்கெற் போட்டி
## இங்கிலாந்து அணி வென்றது

இங்கிலாந்தில் நடைபெறும் மும்முனை கிரிக்கெற் போட்டிகளில் நேற்று முன்தினம் ''பிறிஸ்ரலில்'' சிம்பாவே அணியை எதிர்த்தாடிய இங்கிலாந்து அணி 6விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி, 24.4ஓவர் முடிவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 94ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதில் ''மஸ்கெனரி'' 26ஓட்டங்களையும் ''அன்ரூ பிளிக்னர்'' 17ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ''ரென்கோக்'' 26ஓட்டங்களுக்கு 4விக்கெற்றுக் களையும் ''அன்ரூபிளிற்ஓவ்'' 13 ஓட்டஙகளுக்கு 3 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 17.4 ஓவர் முடிவில் 4 விக்கெற்றுக்களை இழந்து இலக்கான 95ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து அணிசார்பாக ''அன்ரூபிளிற் ஓவ்'' ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும் ''மைக்கல்வோன்'' ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சிம்பாவே அணி சார்பில் ''கீல்ஸ்ரிக்'' 21 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றுக்களை வீழ்த்தினார். (உ-68)

**செய்திகள்**

## வடகிழக்கு மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டி

(யழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணமட்ட மெய்வன்மைப்போட்டிகள் வருகின்ற 12,13ஆம்திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வடக்கின கிளிநொச்சி, முல்லைதீவு, மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாண மாவட்ட வீரர்களுடன் கிழக்கின் திருகோணமலை, மட்டக்களப்பு, மற்றும் அம்பாறை மாவட்டங்களின் வீரர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் வழக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக் களத்தினால் நடாத்தப்படுகின்ற போட்டிகளில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார். வடக்கு - கிழக்கு மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகள் யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக இடம் பெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

# தாயக விடுதலை வரலாற்று அறிவை தமிழ் மக்களுக்கு ஊட்ட வேண்டும்

## கௌசல்யன் வலியுறுத்து

(கிளிநொச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வின்சன் தேசியக்கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் பவளகாந்தன், மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தனது உரையில்,

தமிழ் மாணவர்களின் கல்வியை சிங்கள அரசு திட்டமிட்டு நசுக்கி வருகின்றது. எமது வரலாறு மறைக்கப் பட்டு எமது மாணவர்களுக்கு ஒவ்வாத வரலாறு புகட்டப்படுகின்றது.

அத்துடன், எமது தாயக விடுதலை தெடர்பான வரலாற்று நிகழ்வு பற்றி எமது மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் அறிவூட்டப்படுவது அவசியம் என்றார். (உ-8)

# கூட்டணி மத்தியகுழு தீர்மானத்திற்கு தீர்ப்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு எடுத்துள்ள தீர்மானத்தை தமிழ தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் அணி) ஆகியன வன்மையாக எதிர்த்துள்ளன.

கடந்த 6ம் திகதி கொழும்பில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தமிழ் மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தும் வகையில் அறிக்கைகள் விட்டு ஒருவரை ஒருவர் குறை கூறக்கூடாது என்று எடுத்த தீர்மானத்தையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும கட்சிகள் எதிர்த்துள்ளன.

இது தொடர்பாக அக்கட்சிகள் கருத்து வெளியிடுகையில், 'சட்டதிட்டங்கள் எதுவும் கூட்டமைப்பில் இல்லாத நிலையில் எம்மைக்கட்டுப் படுத்துவதற்கு கூட்டணிக்கு உரிமை இல்லை என்றும் கூட்டணியினர் சரியான முறையில் நடந்தால் தாம் எதனையும் கூறமாட்டோம் என்றும் தெரிவித்துள்ளனர். (வ)

## ஐ.தே.க உறுப்பினர்கள் நால்வரின் அங்கத்துவம் நீக்கம்

(கொழும்பு)

வன்செயல் மற்றும் குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் நால்வரின் கட்சி அங்கத்துவத்தைத் தடை செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் கடந்த திங்களன்று நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வத்தளைப் பிரதேச சபையின் தலைவர் தியாகரத்ன அல்விஸ், ஹிக்கடுவ நகரசபை உபதலைவர் நிமால் சந்திரஸ்ரீ, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் றோல் போக கவத்த, பிந்தோட்ட பிரதேச சபையின் உப தலைவர் ஏ.எவ்.பி.ரவீந்திர ஆகியோரது கட்சி அங்க்த்துவமே இவ்வாறு நீக்கப்படவுள்ளது.

இதேவேளை, யாஎல நகரசபை உறுப்பினரை கட்சியின் நடவடிக்கைகளில் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த)

## சிறு விளம்பரம்

### Paper class 2003

ஆண்டு 9,10 O/L 2003 மாணவர்கட்கு உங்கள் வீடுகளுக்கு வந்து கணிதம் அலகு ரீதியாக Paper, Full Paper கற்பிக்கப்படும். ஆசிரியர் K.L.சங்கர், O/L Day class மாணவர்களும் தொடர்பு கொள்ளலாம். தினசரி ரெலிபோன் மூலம் தொடர்பு கொள்ளவேண்டிய நேரம் 4-5 (ப.நே) T.P: 222 2385, 222 2927.

# 1000 பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க திறைசேரி அங்கீகாரம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட சகல மாகாணங்களிலும் உள்ள தேசியப் பாடசாலைகளில் ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்நியமனங்களை வழங்குவதற்கான அனுமதியினை திறைசேரி வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவின் பணிப்பாளர் எம்.யூ.எஸ். சறூஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய பாடசாலைகளில் 2 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு அனுமதி கோரப்பட்ட போதிலும் முதல்கட்டமாக ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு கடந்தவாரம் அனுமதி கிடைத்துள்ளது.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், விவசாயம் ஆகிய பாடங்களுக்கே பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கவுள்ளனர்.

கல்வி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் 323 தேசிய பாடசாலைகள் தற்போது இயங்கிவருகின்றன.

இப்பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# வறிய மாணவர்தம் பசிப்பிணி நீக்கும் சாவகச்சேரி மகளிர் மகாவித்தி!

(தென்மராட்சி)

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் ஆண்டு 1 முதல் 5 வரையான வகுப்புக்களில் கல்வி பயில்கின்ற மாணவர்களில் 26 பேர் வறுமை காரணமாக காலை உணவு எதுவும் உட்கொள்ளாது கல்வி கற்பதற்கு வருகின்றமை கல்லூரி நிர்வாகம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இப்பிள்ளைகள் காலை உணவு எதுவும் உட்கொள்ளாது பாடசாலைக்கு வருவதால் அடிக்கடி மயக்கமுற்று வீழ்கின்ற சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இப்பிள்ளைகளின் பசியைப் போக்கும் பொருட்டு வித்தியாலய ஆசிரியர்கள் தமது செலவில் வாரத்தில் 3 தினங்களுக்கு காலை உணவினை வழங்கி வருகின்றதுடன், மீதியான இரு தினங்களுக்கும் சாவகச்சேரி பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா சேவை நிலையத்தினர் தமது செலவில் காலை ஆகாரத்தினை வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பிள்ளைகளின் குடும்ப நிலைகள் மிகவும் பரிதாபகரமாக இருப்பதன் காரணமாகவே காலை உணவினை உட்கொள்ளாது பாடசாலைக்கு வருகின்றனர் எனவும் அறியப்படுகின்றது.

இதேவேளை, இப்பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களின் முன்மாதிரியான செயற்பாட்டினை பலரும் மெச்சி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## மிகக் குறைந்த வளங்களுடன்

# நிறைந்த சேவையாற்றும் சாவகச்சேரி வைத்தியசாலை

(தென்மராட்சி)

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த 6 மாத காலப் பகுதியில் மொத்தம் 66 ஆயிரத்து 213 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். வைத்தியசாலையின் புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

யூன் மாதம் 30 ஆம் திகதி வரையும் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் 46 ஆயிரத்து 775 பேரும், கிளினிக்குகளில் 17ஆயிரம் பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். அத்துடன் விடுதிகளில் தங்கி 2 ஆயிரத்து 438 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தென்மராட்சியில் 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தினைத் தொடர்ந்து சேதமடைந்த நிலையில் இருக்கும் இவ்வைத்தியசாலை கடந்த ஒரு வருடகாலமாக சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் மிகவும் குறைந்த வளங்களுடனேயே இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வைத்தியசாலையில் மீள் நியமனம் பெற்ற வைத்தியர் ஒருவரும் உதவி வைத்தியர் ஒருவருமாக இருவர் மாத்திரமே கடமையாற்றி வருகின்றதுடன், இங்கு மின்சார வசதியோ அல்லது தண்ணீர் வசதியோ இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

# உலகத் தமிழ் இணைய மாநாடு சென்னையில்

## ஓகஸ்ற் 22,23,24ஆம் திகதிகளில்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான உலகத் தமிழ் இணைய மாநாடும் பொருட்காட்சியும் எதிர்வரும் ஓகஸ்ற் 22, 23,24ஆம் திகதிகளில் சென்னையில் உள்ள தாஜ்கோரமண்டல் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

உலகத் தமிழ் தகவல் தொழில் நுட்ப அமைப்பு, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் தமிழ் மெய்யியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இம்மாநாட்டினை தமிழ்நாட்டின் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா 22ஆம் திகதி அண்ணா பல்கலைக்கழகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார்.

இம்மாநாட்டில் பங்குபெற விரும்புவோர் புனர்வாழ்வு மீள் குடியமர்த்துகை அகதிகள் அமைச்சின் மேலதிக செயலாளர் த.குமாரதாசனுடன் தொடர்பு கொள்ளுமாறும் பங்குபற்றுவதற்கான பதிவுக்கட்டணம் 100 அமெரிக்க டொலர்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக தமிழ் இணையத்தின் முதலாவது மாநாடு 1997ஆம் ஆண்டு சிங்கப்பூரிலும், 1999ஆம் ஆண்டு சென்னையிலும், 2000ஆம் ஆண்டு மீண்டும் சிங்கப்பூரிலும், 2001ஆம் ஆண்டு மலேசியாவிலும், 2002ஆம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோ நகரிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பிரதேச செயலாளர் இடமாற்றம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய கே. கேதீஸ்வரன் கோப்பாய் பிரதேச செயலராகவும், கோப்பாய் பிரதேச செயலராகக் கடமையாற்றிய செ. ஸ்ரீநிவாசன் தென்மராட்சி பிரதேச செயலராகவும் நேற்று முதல் கடமையேற்றுள்ளனர். (உ-77)

# மருந்தகங்கள் மீது திடீர்ப் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியிலுள்ள மருந்தகங்கள் மீது கடந்த 24ஆம் திகதியன்று திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் த.மகாதேவன் தலைமையில் நெல்லியடிப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.இளங்கோ இணைந்து மேற்கொண்ட இத்திடீர்ச் சோதனையின் போது வடமராட்சியிலுள்ள ஒரு மருந்தக உரிமையாளர் வைத்திய அதிகாரியின் சிபாரிசுக் கடிதம் இல்லாத நிலையில் மருந்து விற்பனை செய்த குற்றத்திற்காக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது!

மேற்படி வழக்கு பருத்தித்துறை நீதவான் அ.பிறேம்சங்கர் முன்னிலையில் விசாரிக்கப்பட்ட போது கடை உரிமையாளர் 2 ஆயிரம் ரூபா காசுப் பிணையுடன் ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், பிரதி வெள்ளிக்கிழமைகளில் நீதிமன்றில் கையொப்பம் இடப் பணிக்கப்பட்டது.

மேல் விசாரணை ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (உ)

## குரு பூர்ணிமா ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு "குருபூர்ணிமா ஆன்மீக நிகழ்ச்சிகள்" நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வானது, நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும் அதனைத்தொடர்ந்து வடபிராந்திய சத்தியசாயிசேவா இணைப்புக்குழுச் செயலாளர் வி. செகராஜ சிங்கத்தின் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளது. (உ-15)

# சிரேஷ்ட மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிநெறி

## வட-கிழக்கு மாணாக்கர் பங்கேற்பர்

(கொழும்பு)

நாளை வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சிரேஷ்ட மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறியில் வட-கிழக்கு மாகாணங்களிலிருந்து 79 மாணவர்கள் கலந்து கொள்ளவிருப்பதாக இப்பயிற்சி நெறியை நடத்துகின்ற கார்சன்ஸ் முகாமைத்துவ சேவைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் மனோ செல்வநாதன் தெரிவித்துள்ளார்.

நாடு பூராவுமுள்ள மாணவர்களுக்கு, இத்தகைய மாணவர் தலைமைத்துவப் பயிற்சி நெறிகளை வருடந்தோறும் நடத்துவது இந்நிறுவனத்தின் வழக்கம். ஆயினும் இம்முறை முதன்முறையாக வட-கிழக்கிலுள்ள மாணவர்களும் இதில் கலந்துகொள்ளவுள்ளமை சிறப்பம்சமாகும்.

இப்பயிற்சிக்காக யாழ்ப்பாணத்திலிருந்து சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய வித்தியாலயம், சென். ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றிலிருந்து 45 மாணவர்களும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 26 மாணவர்களும் திருகோணமலையிலிருந்து 8 மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-15)

# அபிவிருத்தி லொத்தர்சபை பணிப்பாளராகவும் ஹரீம்பீரிஸ்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பேச்சாளரான ஹரீம்பீரிஸ் ஜனாதிபதி அலுவலகத்தால் அபிவிருத்தி லொத்தர் சபைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பேச்சாளராகக் கடமையாற்றும் அதேவேளை அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளராகவும் ஹரீம்பீரிஸ் கடமையாற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர்சபை தொடர்பாக பிரகடனம் ஒன்றை ஜனாதிபதி வெளியிட்டதையடுத்து, ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்ந்தும் நீடித்துவரும் இந்த நிலையில் ஜனாதிபதி அலுவலகம் தற்போது ஹரீம்பீரிசுக்கு இப்பதவியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-15)

## நூலக வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரியின் கலை மாணவர் மன்றத்தினால் ஒழுங்கு செய்யபட்ட நூலக எழுச்சி வாரம் கடந்த திங்கள் முதல் மிகச்சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, இக்காலப்பகுதியில் ஈழத்தின் தலை சிறந்த இலக்கிய வாதிகள் மற்றும் எழுத்ததாளர்களிடம் சென்று சேகரிக்கப்பட்ட பெறுமதி வாய்ந்த நூலகள் நாளைய தினம் காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் அ. சிறிக்குமாரன் ஊடாக கல்லூரி நூலகங்களுக்கு வழங்கப்படவுள்ளன. (உ)

HATTON NATIONAL BANK LIMITED HNB

மங்களகரமான திறப்பு விழா

ஹற்றன் நஷனல் வங்கியின்

வாடிக்கையாளர் நிலையமொன்று
நாளை 11ஆம் திகதி
காலை 10.30 மணியில் வரும் சுபவேளையில்
இல. 110, கே.கே.எஸ் வீதி, சுண்ணாகத்தில்
திறந்து வைக்கப்படும்.
இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C/6399)

5வது பிறந்த நாள் வாழ்த்து

10-07-2003



செல்வன் சி.ஜகேஸ்கர்

திரு.திருமதி. சிவாகர் மைதிலி தம்பதியினரின் செல்வப் புதல்வன் செல்வன் சி.ஜகேஸ்கர் அவர்களை பல்கலையும் பெற்று வளமுடன் என்றும் இனிது வாழ்கவென அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியம்மா, சின்னம்மா ஆகியோர் வாழ்த்துகிறார்கள்.

சுன்னாகம் கிழக்கு,
தெகிவளை
(C/6400)
சுன்னாகம்

தவமறைந்து அல்லவை செய்தல்
புதல்மறைந்து
வேடன் புள் சிமிழ்த் தற்று
–குறள்

# வலம்புரி

## குழம்பும் நிலை

அரசுக்கும் விடுதலைப்புலி களுக்கும் இடையே இடம் பெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகள் தடைப்பட்ட சூழ் நிலையில் மீண்டும் அதைத் தொடர்வதற்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்கு வதே ஓரே வழி என்ற முடிவில் வடக்குக்கிழக்கு மாகாணங் களுக்கான இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளிடம் வழங்குவதற்கு அரசு இணக்கம் தெரிவித்தி ருந்தது. எனினும் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான சட்ட வரைவைத் தயாரிப்பதில் அரசு இன்னமும் இழுபறிநிலை யிலேயே உள்ளது.

இடைக்கால நிர்வாக சபைக் கான வரைவை தயாரிப்பதிலேயே இழுபறியென்றால் நிரந்தர தீர்வுத்திட்டத்தை தயாரிப்ப தில் அரசின்பாடு எப்படியிருக் கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இடைக்கால சபைக்கான வரைபுகளை தயாரிப்பதில் ஏற்படுகின்ற தாமதம் சமாதான முயற்சிகளை பாதிப்பதாகவே அமையும். அதாவது விடுதலைப் புலிகள் கோரிய இடைக்கால நிர்வாக சபையை அவர்கள் கேட்டபோது ஒப்படைந்திருந் தால் ஜப்பானில் நடந்த இலங் கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கு பற்றியிருப்பர், அத்துடன் சமாதானப்பேச்சுக்களும் முன் னேற்றகரமாக நகர்வடைந் திருக்கும். ஆனால், இடைக் கால நிர்வாக சபையை வழங் குவதில் இலங்கையரசு பின் னடித்து வந்ததோடு பிரிட்டனி டம் சட்ட ஆலோசனை பெற வேண்டும் எனவும் கூறிவந்தது. இதன் காரணமாக ஏற்பட்ட தாமதம் சமாதானவிரோதி களை விழிப்படைய செய்தது டன் அவர்களுக்கிடையே ஓர் கூட்டையும் ஏற்படுத்த ஏதுவா யிற்று. இதனால் சமாதானத் தின் அறுவடை மேலும் தாம தமாகப் போவது உறுதியாகி விட்டது.

இதைவிட விடுதலைப்புலி களிடம் இடைக்கால நிர்வாக சபை கையளிக்கப்பட இருக் கிறதென்ற செய்தியுடன் விழித் துக் கொண்ட முஸ்லிம் கட்சி கள் அமைக்கப்படும் இடைக் கால நிர்வாக சபையில் முஸ் லிம்கள் தனித்தரப்பாக செயற் படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத் துள்ளன.

முஸ்லிம் கட்சிகளின் இக்கோ ரிக்கை அரசினால் தயாரிக்கப் பட்டுவரும் இடைக்கால சபை சட்ட வரைபில் இடம் பெற்றி ருக்க நியாயம் இல்லை என் பதால் அரசு தயாரிக்கும் வரைபுக்கும் முஸ்லிம் கட்சி களின் கோரிக்கைக்குமிடையில் ஓர் இடைவெளி ஏற்படவே செய்யும்.

இத்தகைய இடைவெளி யால் சமாதானத்தைக் குழப் பும் கூட்டுகளுக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்க ளின் ஆதரவு கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. இதனால் சமாதான முன்னெடுப்புக்கள் பாதிப்படைய நேரிடலாம்.

# குடாநாட்டில் காணாமல் போனோர் குறித்த 6 ஆம் கட்ட விசாரணை சனி, ஞாயிறு தினங்களில்

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் சம்பந்த மாக விசாரணை செய்வதற்கென மனித உரிமை ஆணைக் குழுவி னால் நியமிக்கப்பட்ட கலாநிதி தேவநேசன் நேசையா தலைமை யிலான குழுவின் 6ஆம் கட்ட விசாரணை எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில் யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் நடை பெறவுள்ளது.

இதேவேளை இவ்விசாரணைக் குழுவின் பட்டியலில் உள்ளவர்கள் தொடர்பான விசாரணைகளை நடாத்த முறைப்பாடு செய்த 45 பேருடன் தொடர்பு கொள்ள முடி யாதுள்ளமையால் சம்பந்தப்பட்ட முறைப்பாட்டுக்காரர்களை 12 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9.00 மணிக்கும் ந.ப 12 மணிக்குமிடையில் சமூகமளிக்கும் படியும் அறி விக்கப்பட்டுள்ளது.

தொடர்பு ஏற்படுத்த முடியாத காரணத்தால் மீண்டும் விசாரணைக் குச் சமூகமளிக்குமாறு அழைக்கப் பட்டவர்களது பெயர் விபரங்கள் வருமாறு: மு.மாலினி பங்களா றோட் மீசாலை தெற்கு மீசாலை, ரி.செல வரட்ணம் கோண்டாவில் தெற்கு, ரி.மகேஸ்வரி ஏ.வி றோட் அரியாலை, ஆர்.யோகேஸ்வரி நுணாவில் கிழக்கு சாவகச்சேரி மா.பெரியமாவடி பேரம்பலம் வீதி சாவகச்சேரி, எஸ்.சுப்பிர மணியம் மட்டுவில் மேற்கு சாவகச்சேரி, பி.செல்வராஜா கோயிலாக்கண்டி கைதடி, எ.சரவணமுத்து சில்லாலை வீதி பண்டத்தரிப்பு, எம். சுப்பிரமணி யம் கைதடி தெற்கு, ந.இராசமணி மட்டுவில் மேற்கு சாவகச்சேரி, வை.கமலாதேவி சாவற்காடு, ஏ.லுத் தம்மா வீரபத்திர கோவிலடி கச்சாய் றோட் சாவகச்சேரி, பி.புஸ்பவதி 12 செம்மணி ஒழுங்கை பொலிஸ் ரேசன் ஆனைக்கோட்டை, அம்பிகா 27/5 வைரவர் கோவிலடி அரியாலை தெற்கு, என்.நவரட்ணம் 674 கண்டி றோட் அரியாலை, வி.வேலாயுதம் இணுவில் கிழக்கு, அ.டொமினிகா 15 ஈச்சமோட்டை, து.கமலநாயகி வில்லுண்டியர் வீதி புங்கங்குளம், எஸ்.பரமநாயகி 11/4பென்டிக்கோஸ் வீதி கண்டிறோட் யாழ்ப்பாணம், கனகாம்பிகை 54/2 1ஆம் ஒழுங்கை பருத்தித்துறை, இ.சரோஜினிதேவி 110 உப்பங்குளம் வீதி கொழும்புத் துறை, எஸ்.செல்லத்துரை 32/2 3ஆம் குறுக்குத்தெரு கொழும்புத் துறை, க.மனோன்மணி, சண்முகம் றோட் சாவகச்சேரி, செல்லத்துரை ஜோசப் கரம்பன் கிழக்கு ஊர்காவற் றுறை, கனகரட்ணம் அருமைராஜா திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பா ணம், சிவகுணம் மனோகரன் 114/1 கோவில் வீதி நல்லூர், சதாசிவம் சிவகுருநாதன் திருநெல்வேலி கிழக்கு, தவராஜா சிவரூபன் 979 கொழும்புத்துறை, கே.கனோந்திர ராஜன் பெரிய மாவடி பேரம்பலம் வீதி சாவகச்சேரி. சின்னத்தம்பி ஜெயபாலன் ஆவரங்கால் புத்தூர், கந்தசாமி கண்ணதாசன் மீசாலை வடக்கு கொடிகாமம், வேலுப்பிள்ளை மகிந்தன் வன்னியபுரம் சுன்னாகம், கார்த்திகேசு கனகசூரியர் கைதடி சாவகச்சேரி, சோல்மூன் ஜெயமூல் தவசிக்குளம் மிருசுவில், எம்.சக்தி தாசன் பண்ணாகம் சுழிபுரம், எம்.தயா பரன் தனங்கிளப்பு சாவகச்சேரி, சின்னராஜா உதயகுமார் 5வது சந்தி நவாலிறோட் யாழ்ப்பாணம், அமிர் தநாதன் அமில்ரன் கிளாலி எழுது மட்டுவாள் எஸ்.கமலேஸ்வரன் சுழி புரம் மத்தி, எம்.ஞானராஜன் பிடாரி கோவிலடி ஆனைக்கோட்டை, பி.ஜெக நாதன் 678/1 முள்ளி றோட் அரியாலை, சவிமுத்து அன்ரன்ஜெயக்குமார் 136 ஆத்தி சூடி வீதி கந்தர்மடம், தங்கவடிவேல் இரா ஜேந்திரகுமார். (உ-4)

# கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வன் சந்திப்பு நாளை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுக்கும் போர் நிறுத்தக் கண காணிப்புக் குழுவின் தலைவர் றிக்வே ரெலிவ்சனுக்குமிடையில் நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் சந்திப்பு இடம் பெறவுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அர சுக்குமிடையில் நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தையின் முடி வில் ஏற்பட்ட இணக்கப்பாட்டிற்குப் பின் கடற்பிராந்தியத்தில் ஏற்படுகின்ற விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த மீறல்களைத் தடுப்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக இறுதித் தீர்மானங்கள் எடுப்பதற்கா கவே இச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

கடந்த இரு நாட்களுக்கு முன்பு திருகோணமலைக்கு விஜயம் செய்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் கிண்ணியா குரங்கு பஞ்சான் குளம் பகுதியில் இராணு வத்தினரின் பகுதிக்குள் விடுதலைப் புலிகளால் அமைக்கப்படுவதாகக் கூறப்படும்,முகாம் அகற்றப்பட வேண் டும் என்ற கோரிக்கை தொடர்பாக திருமலை மாவட்ட விடுதலைப் புலி களுடன் விரிவான பேச்சுவார்த்தை நடத்திய அதேவேளை,இராணுவத் தினருடனும் இது பற்றி பேச்சு நடத்தினார்.

முகாம் அகற்றப்படுவது தொடர் பாக சுமுகமான தீர்வு கிடைக்கப் பெறாததால் மீண்டும் இரு தரப்பி னருடனும் அங்கு பேச்சுநடத்தி முகாமை அகற்றுவதற்கான நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக் கின்றன.

அங்கு பேச்சு முடித்துத் திரும்பும் இவர் நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் விடுதலைப் புலி களின் அரசியல் துறைப்பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந் த்தித்துப் பேசவுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

(உ-15)

## கொடிவாரம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் விவகார அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன் றத்தினால் இளைஞர் அபிவிருத்திக் கென ஒதுக்கப்படும் இளைஞர் அபி விருத்திக்கான கொடிவாரம் இன்று முதல் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த ஜூன் மாதம் இடம்பெற்றி ருக்க வேண்டிய இவ் இளைஞர் கொடிவாரம் பிற்போடப்பட்டு தற் போது தேசிய மட்டத்தில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் யாழ்.மாவட்டத்தில் இடம் பெறும் இந்நிகழ்வில் அனைத்து நலன் விரும்பிகளையும் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட உதவிப்பணிப் பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி வேண்டு கோள் விடுத்துள்ளார். (உ)

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு சனசமுக நிலையங் களின் சமாசம் நாளை முதல் மூன்று தினங்கள் காக்கைதீவு கரையாம்பிட்டி மயானம் நவாலி சங்கையான் வாய்க் கால் ஆகியவற்றை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யத் தீர்மானித்துள்ளது.

இப்பகுதிகளிலுள்ள ஏனைய சன சமூக நிலையங்கள் கிராம அபிவி ருத்திச் சங்கங்கள் ஆகியனவற்றை யும் இச் சிரமதானப் பணியில் பங் கேற்குமாறு சமாசத் தலைவர் கேட் டுள்ளார். (உ-15)

## பா.உக்கள் மீது பாதுகாப்பு சோதனை

(கொழும்பு)

பாராளுமன்றம் கூடும் நாட்க ளில் பாராளுமன்றத்தினுள் வருகை தரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தற்போது பாதுகாப்புச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கடந்த மாதம், எதிரணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிய சவப்பெட்டியை பாராளுமன்றத்தினுள் கொண்டு சென்று சாவீடு நடத்திய துடன் மேலும் பல தரப்பட்ட பொருட் களை அவர்கள் பாராளுமன்றத்தி னுள்கொண்டு சென்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தவிர்க்கும் நோக்கு டனேயே பாதுகாப்புச்சோதனை செய்யப்படுகிறது என கடந்த திங் கட்கிழமை காலை பாராளுமன் றத்தில் நடைபெற்ற கட்சித்தலை வர் கூட்டத்தில் சபாநாயகர் தெரி வித்துள்ளார். (உ-15)

## உப-குழுக் கூட்டம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட உப-குழுக் கூட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் இன்று மு.ப.10.00 மணிக்கு கண்காணிப்புக் குழு பிரதி நிதிகள் மேற்பார்வையில் நடைபெற வுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழீழ விடுத லைப் புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப் பாளர் இ.கௌசல்யன்,முஸ்லிம்கள் தரப்பில ஐ.எம்.முகைதீன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பொத்துவில்,அக்கரைப்பற்று,காரை தீவு,அம்பாறை ஆகிய பிரதேசங் களில் உள்ள முஸ்லிம் விவசாயக் காணிகளை அவர்களிடம் மீள ஒப் படைபபதற்கான உப-குழுக் கூட்ட ங்கள் ஏற்கனவே நடத்தப்பட்டன.

அம்பாறை மாவட்ட காணிப்பி ணக்குகளை தீர்ப்பதற்கான உபகுழுக் கூட்டம் கடந்த மாதம் 10ம் திகதி இறுதியாக நடைபெற்றமை குறிப் பிடத்தக்கது.

(தி)

## சமுர்த்தி மன்ற தெரிவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமுர்த்தி மன்ற தெரிவுக் கூட்டம் இன்று முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்துக்கு யாழ்.மாவட்டத் திலுள்ள அனைத்து சமுர்த்தி செயற் குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ)

## மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்கு உயர்நீதிமன்றம் தடை உத்தரவு

(கொழும்பு)

பிரமுக வங்கி தனது நடவடிக் கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அண் மையில் வழங்கிய தீர்ப்பை இடை நிறுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரமுக வங்கியின் நடவடிக்கை களை மீள ஆரம்பிக்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் விடுத்த உத்தரவைத் தடைசெய்யுமாறு மத்திய வங்கியின் நிதிச் சபை சமர்ப்பித்த மனுவை அடுத்தே இத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதிக்குள் பிரமுக வங்கியை மீளப் புனரமைப் பதற்கான விதப்புரை அறிக்கையை மத்திய வங்கியின் நிதிச் சபை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது. (த)

## கண்ணிவெடி அகற்றும் பணியில் அதிகபெண்கள்


(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் அதிக பெண்களை ஈடுபடுத்த உள்ளது.

இதற்கான பயிற்சி வகுப்பு சென்ற கிழமை ஆரம்பிக்கிப்பட்டுள்ளது.

சர்வதேச தரத்திலான இப்பயிற்சி வகுப்புக்களை சர்வதேச தொழில் நுட்ப நிறுவனங்களின் ஆலோசகர் கள் வழங்கவுள்ளனர்.

பயிற்சி வழங்கப்பட்ட பின் கடந்த காலங்களில் புதைக்கப்பட்ட கண் ணிவெடிகள் அகற்றும் பணியில் இவ் கள் ஈடுபடுத்தப்படவுள்ள்னர்.(உ-35)



## சாயி அருளமுதம்

ஒருவர் ஆற்றும் கருமம் அல்லது செயல் அவருடைய உள் மனதின் தன்மையை வெளிக்காட்டும் சாதனமாகும். ஒருவருடைய செயற்பாடுகளையும் நோக்கங்களையும் அவற்றால் விளையும் பலாபலன்களையும், அவரது ஈடுபாட் டின் அளவையும் கவனமாக அவதானிப்பதன் மூலம் அவர் ‘பசு’வா (மிருகமா) அல்லது ‘பசுபதி’யா (ஆன்மாக்களின் தலைவன் அதாவது இறைவன்) என்பதைக் கூற முடியும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## ஊழியர் நம்பிக்கை நிதிய நிர்வகிப்பு கைமாறுகிறது

(கொழும்பு)

நிதியமைச்சின் கீழ் நிர்வகிக் கப்படும் ஊழியர் நம்பிக்கை நிதி யத்தை தொழில் வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக தொழில் வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள் ளார்.

ஊழியர்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமானால் ஊழியர் நம்பிக்கை நிதியம், தொழில் வாய்ப்பு அமைச்சின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்படவேண்டும் எனவும், இவ்வாறு கொண்டு வருவ தற்கான அமைச்சரவை அனுமதி யைப் பெறும் முகமாக அமைச்சர வைப் பத்திரமொன்றை எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப் பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார். (உ-15)

# அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு அரசியல் வழிமுறையில் தீர்வுகாண வேண்டும்

## தென்னாபிரிக்க பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கலாநிதி றொக்கி வில்லியம் ஆலோசனை

(தென்மராட்சி)

**உலகில் முரண்பாடுகள் தோன்றியுள்ள நாடுகளில் எல்லாம் அதி உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய பிரச்சினைகள் இருந்துவருகின்றன. இனமுரண்பாடுகளுக்கு அரசியல் ரீதியான தீர்வுகள் எட்டப்படும்போது அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள் இல்லாமல் போய்விடும்**

இவ்வாறு தென்னாபிரிக்காவின் பாதுகாப்பு அமைச்சுக்கான ஆலோசகரான கலாநிதி றொக்கி வில்லியம் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நேற்று நடைபெற்ற அதி உயர பாதுகாப்பு வலயமும் சமாதான முன்னெடுப்புகளும் இயல்புநிலையும்" பற்றிய செயலமர்வில் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

முரண்பாட்டுக் கற்கை நெறிகளுக்கான பேர்கோவ்பவுகன்டேசன் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட இச் செயலமர்வில் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் படையினர், மதகுருமார், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

கலாநிதி மரியோ தோமஸ்ஸின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இச் செயலமர்வில் யாழ் கத்தோலிக்க ஆயர் மேதகு. தோமஸ் சௌந்தரநாயகம், நைஜீரியா பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கலாநிதி கயோடெமி ஆகியோரும் சுமுகமளித்திருந்தனர்.

பாதுகாப்பு ஆலோசகரான கலாநிதி றொக்கி வில்லியம் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

**கெரில்லாப் போராளி**

நான் தென்னாபிரிக்கா தேசிய காங்கிரஸில் 16 வருடங்கள் கெரில்லாப் போராளியாக இருந்தபின். தற்போது கடந்த 9 வருடங்களாகப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகராக இருந்துவருகிறேன். உயர் பாதுகாப்பு வலயத்தினை பரந்துபட்ட இராணுவ அரசியல் முறையிலேயே பார்க்க வேண்டும் நாட்டில் எந்தவொரு பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்கும்போது தனிமனித பாதுகாப்பை கருத்தில் கொண்டே எடுக்கவேண்டும்.

உலகத்தில் முரண்பாடுகள் இடம்பெற்றுவ்ருகின்ற நாடுகளைப் பார்ப்போமானால், அங்கு அமைதி முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது அதனை விரும்பாதவர்கள் சிலர் இருக்கத்தான் செய்வார்கள்.

இதனையிட்டு நாம் பாரதூரமாக சிந்திக்கத் தேவையில்லை. ஒவ்வொரு முரண்பாடும், பிரச்சினையும் தனித்துவமானது. இந்த அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகளைப் பற்றி பார்க்கின்ற போது சில பொதுவான கோட்பாடுகள் பற்றி கவனத்தில் கொள்ள வேண்டும்.

**நாம் எங்கே போகின்றோம்**

நாங்கள் எங்கே போகின்றோம்? என்ற சிந்தையும் தொலைநோக்குப் பார்வையும் எமக்கு இருக்குமானால் இப்பிரச்சினை சுலபமாகிவிடும். பிரதானமாக எந்தொரு விடயத்திலும் மனித உரிமைகள் பாதுகாப்பு விடயம் முன்னிலைப் படுத்தப்படுமாயின் அங்கு பிரச்சினைகள் எழவே நியாயம் இருக் காது.

அதி உயர் பாதுகாப்பு விடயத்தில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கொண்ட குழுக்கள் செயற்படுமாயின் பிரச்சினைகளை இலகுவில் தீர்க்கக் கூடிய நிலை காணப்படும். மேலும் இத்தரப்புக்கள் மத்தியில் நல்ல புரிந்துணர்வும் நம்பிக்கையும் தோனற வேண்டும். நம்பிக்கையற்ற ஒருவரையொருவர் புரியாத நிலையில் எந்தவொரு பிரச்சினைக்குமே தீர்வகளைக் கண்டுவிட முடியாது.

**தப்பவிப்பிராயம்**

இலங்கையில் அரசுக்கும் புலிகளிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் நல்ல விடயங்களே இடம்பெற்றுள்ளன. என்ற அபிப்பிராயம் வெளிநாட்டவர்களிற்கு ஏற்படுகின்றது ஆனால் இன்று பார்க்கின்ற போது பல குறைபாடுகளும் பின்னடைவுகளும் இங்கு காணப்படுகின்றன.

அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகளிற்கு அரசியல் மட்டத் தீர்வுதான் நல்ல முடிவுகளைக் கொண்டுவரும். எனவே ஒருங்கிணைக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களை அமைத்து எழும் பிரச்சினைகளிற்கு வேண்டிய தீர்வுகளைக் காண முயலவேண்டும் அத்துடன் எதிர்காலத்தில் தேசியமட்டத்தில் விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

( உ-77-43)

## ஆனந்தசங்கரி எம்.பிக்கு எதிர்க்கட்சியினர் கரகோசம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி நேற்று முன்தினம் பாராளுமன்றம் சென்றபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று மகிழ்ச்சிக் கரகோசம் செய்து அவரை வரவேற்றனர்.

அண்மையில்நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஆனந்தசங்கரி தொடர்ந்தும் தலைவர் பதவி வகிப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கு மகிழ்ச்சி தெரிவித்தே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளிற்கு எதிராக ஆனந்தசங்கரி எதிர்த்துக் குரல் கொடுத்து வருவதாக எதிர்க்கட்சி உறுப்பினர் அனுராபண்டாரநாயக்கா தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

## ஓமந்தைக்கும் வவுனியாவிற்கும் விரைவில் புகையிரத சேவை

(வவுனியா)

வவுனியாவிற்கும் ஓமந்தைக்கும் இடையிலான புகையிரத பாதை செப்பனிடும் பணிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட உள்ளன.

ஓமந்தையில் இருந்து சுமார் 10கிலோமீற்றர் தொலைவில் உள்ள வவுனியா புகையிரத நிலையம் வரையான புகையிரதப் பாதை செப்பனிடப்பட்டதும் விரைவில் பயணிகள் புகையிரத சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டால் வடபகுதி பயணிகளின் போக்குவரத்தில் நிலவும் நெருக்கீடுகள் குறைவடையும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(த-13)

---

**அன்ரன்...**

ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிய வருகிறது.

விடுதலைப் புலிகளுக்கு இலண்டனில் தடை விதத்துள்ள போதும், அன்ரன் பாலசிங்கம் அந்நாட்டுப் பிரஜையாக இருப்பதால் அவருக்கு சட்டச் சிக்கலில்லை.ஆயினும், விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளராக தமிழ்ச்செல்வன் செயற்பட்டுவருவதால்,இவரது பிரிட்டிஷ் விஜயத்திற்கு தூதரகம் விசா வழங்குவது தொடர்பாக மறுபரிசீலனை செய்யப்படக்கூடும் என தற்போது தெரியவந்துள்ளது.

மேலும்,வட அயர்லாந்திலுள்ள ஐ.ஆர்.ஏ.போராட்ட இயக்கத்தின் அரசியல் பிரிவுக்கு பிரிட்டனில் அனுமதி அளிக்கப்பட்ட அதேவேளை விடுகலைப் பலிகளின் அரசியல் துறைக்கும் லண்டனில் அனுமதி அளிக்கப்படுமா என்ற புதிய வினாவொன்று தற்போது எழுந்துள்ளது.

இதேவேளை அண்மையில் பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் ஆலயத்தில் இருந்து உயர்ஸ்தானிகர் தலைமையிலான குழுவொன்று வன்னி சென்று விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து உரையாடியது.

லண்டனில் தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் தலைவர்களை அந்நாட்டு இராஜதந்திரிகள் நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றால்,தமிழ்ச்செல்வன் அங்கு செலவதைத் தடை செய்வதில் அர்த்தமில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-15)

## சுகவீனம் காரணமாக போராளி சாவு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் வவுனியாவில் சாவடைந்துள்ளார்.

லெப்ரினன் கேணல் நிர்மலன் (சிவானந்தன் நிமல்ராஜ் பலாலி வீதி திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணம்) என்ற போராளியே சாவடைந்தவர் ஆவார்.

(ந-5 )

---

**13 ஈழத்...**

அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் மண்கும்பான்,கிளிநொச்சி, மன்னார்,வவுனியா,கொழும்பு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்.இவர்களில் ஒரு சிறுவன் உட்பட 4 பெண்களும் அடங்குகின்றனர்.

(த-48)

---

**ஸ்பெயின்...**

சமாதானப் பேச்சுவார்த்தை தொடராமல் இடை நிறுத்தப்பட்டாலோ அல்லது ஸ்தம்பிதம் அடைந்தாலோ சர்வதேச சமூகம் இச் சமாதான விடயத்தில் அக்கறையை இழந்துவிடும். சமாதானத்திற்கான முயற்சிகள் தொடர்ந்து வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (உ-15)

## இளம் குடும்பப் பெண் மீது சிப்பாய்கள் வல்லுறவு முயற்சி

### நெடுந்தீவு 6ம் வட்டாரத்தில் சம்பவம்

(நெடுந்தீவு)

இளம் குடும்பப் பெண் ஒருவரை கடற்படைச் சிப்பாய்கள் இருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்த முயற்சித்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் நெடுந்தீவு மத்தி 6ம் வட்டாரத்தில் இடம்பெற்றுள்ளது இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பிரஸ்தாபப் பெண்ணின் கணவர் கடற் தொழிலுக்கு செல்லும் நேரம் திரும்பிவரும் நேரம் என்பவற்றை அவரிடமே கேட்டறிந்து கொண்ட கடற்படைச் சிப்பாய்கள் இருவர் அவர் கடலிற்கு சென்று சிறிது நேரத்தில் அவரது வீட்டிற்கு சென்றுள்ளனர்.

அங்கு சென்ற அவர்கள் வீட்டின் கதவைத்தட்டியபோது கணவரே திரும்பி வந்திருப்பதாக நினைத்து பிரஸ்தாப பெண் கதவைத் திறந்துள்ளார்.

அப்பொழுது சிப்பாய்கள் பெண்ணின் முகத்திற்கு ரோச்லைற் அடித்தனர். இதனால் அதிர்ச்சியடைந்த பிரஸ்தாபப் பெண் கூக்குரலிட பெண்ணின் மாமனார் அங்கு சென்றுள்ளார். இதனால் தமது முயற்சியைக் கைவிட்டுச் சென்ற சிப்பாய்கள் இருவரும் இதுசம்பந்தமாக யாரிடமும் முறையிடக் கூடாதென எச்சரித்துச் சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக நெடுந்தீவு அரசியல்துறையினரிடமும், கண்காணிப்புக் குழுவிடமும் முறையிடப்பட்டுள்ளது.

(த-48)

## காத்தான்குடி தேசிய கல்லூரி மாணவர்கள் நேற்று மறியல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி ஆணகள் மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று வீதிமறிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 5தேசிய பாடசாலைகளில் 4பாடசாலைகளிற்கு கல்வி அமைச்சினால் கணனிகள் வழங்கப்பட்டுள்ள போதும் தமது பாடசாலைகளிற்கு கணனிகள் வழங்கப்படாததைக் கண்டித்தே மாணவர்கள் வீதி மறியல் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இதனால் மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியூடான போக்குவரத்து 3மணிநேரம் பாதிப்படைந்தது.

கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குக்கு எதிரான சுலோகங்களையும் மாணவர்கள் தாங்கியிருந்தனர்.

மேற்படி வீதி மறியற் போராட்டம் தொடர்பாக கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டு இருவாரங்களிற்குள் நடவடிக்கை எடுப்பதாக வலயக்கல்விப் பணிப்பாளர் உறுதியளித்ததை அடுத்து மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை கடந்த இருவாரங்களிற்கு முன்னர் கல்வி அமைச்சர் மட்டக்களப்பு தேசிய பாடசாலைக்கு நேரில் விஜயம் செய்து கணனிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-14)

## சித்தமருத்துவத்துறை மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்கள் நேற்று முதல் விரிவுரைகளை பகிஷ்கரிக்கும் போராட்டம் ஒன்றை ஆரமபித்துள்ளனர்.

சித்த மருத்துவத்துறையை தனிப் பீடமாக்குமாறு கோரியே இப்பகிஷ்கரிப்பு போராட்டம் இடம்பெற்றுவருகிறது.

மேற்படி கோரிக்கை தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிற்கு சித்த மருத்துவத் துறை மாணவர் ஒன்றியத்தினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை எமது பகிஷ்கரிப்பு போராட்டம் தொடரும் என மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

(த)

## பொதுமக்கள் 342 இருப்பிடங்களில் இருந்து கடந்த 3மாதங்களில் படையினர் வாபஸ்

(தென்மராச்சி)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 17 மாதங்கள் முடிவடைந்த நிலையில் இன்னமும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 650 பொதுமக்களின் இருப்பிடங்கள் பாதுகாப்புப் படையினரின் பாவனையில் இருந்து வருகின்றது.

இத் தொகை கடந்த மூன்று மாதங்களிற்கு முன்னர் 992 ஆக இருந்து பாதுகாப்புப் படையினர் தாம் பாவித்துவந்த 342 பொதுமக்களின் இருப்பிடங்களை கடந்த 3மாதங்களில் உரியவர்களிடம் கையளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த ஏப்ரல் மாதம் 30ம் திகதிய புள்ளிவிபரங்களின் பிரகாரம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் யுத்தத்தின் காரணமாக 38 ஆயிரத்து 502 வீடுகள் முற்றாக சேதமடைந்தும், 68 ஆயிரத்து இரண்டு வீடுகள் பகுதியாச் சேதமடைந்தும் இருப்பதாக தெரிய வந்துளளது. (உ-77)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.